Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 297 | வியாழக்கிழமை | புரட்டாதி 07 ஆம் நாள் 23 செப்ரெம்பர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்:16 விலை : ரூ.30

செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## கொரோனாச் சடலம் வைத்தபெட்டி உடைப்பு

கிளிநொச்சியில் மற்றொரு சம்பவம்

கிளிநொச்சி, செப். 23

கிளிநொச்சியில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலம் பெட்டிக்குள் வைத்து 'சீல்' வைக்கப்பட்டு தகனம் செய்வதற்கு எடுத்துச் 15

## யாழ்.பல்கலைப் பட்டமளிப்பு 7ஆம் திகதி நிகழ்நிலையில்

மாணவர்களும் இணக்கம்

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, திட்டமிட்டபடி எதிர்வரும் ஒக்ரோபர் 7 ஆம் திகதி நிகழ்நிலை வாயிலாக நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாக் குழுத் தலைவரும், கலைப் பீடாதிபதியுமான கலாநிதி கே.சுதாகர் இதனைத் தெரிவித்தார். 15

## திங்கட்கிழமை தொடக்கம் பணிவிலகல் போராட்டம்

நேற்றைய போராட்டத்தின் பின்னர் சுகாதாரத் தொழிற்சங்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 23

தமது கோரிக்கைகளை நிறைவேற்று மாறுகோரி சுகாதாரத் தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தினர் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர். தமது கோரிக்கைகள் சில நாள்களில் நிறைவேற்றப்படாவிட்டால், எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 5 மணித்தியாலங்கள் பணிவிலகல் போராட்டத்தில் ஈடுபடுவோம் என்றும் தெரிவித்தனர். 15

### காணாமற்போனோர் கொல்லப்பட்டிருந்தால்

# உறவுகளுக்கு மரணச்சான்றிதழ்; கொலையாளிகளுக்கு என்ன தண்டனை?



ஜனாதிபதியிடம் கேட்கிறார் செல்வம் எம்.பி.

கொழும்பு, செப்ரெம்பர் 23

"காணாமலாக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மரணச் சான்றிதழ் கொடுப்பதானால், அவர்களைப் படுகொலை செய்தவர்களுக்கு என்ன தண்டனை கொடுக்கப்போகின்றார்? – என்று, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கேள்வி எழுப்பினார். 15

## 1,321 தொற்று சாவு 92

கொழும்பு, செப். 23

இலங்கையில் கொரோனாத் தொற்றால் மேலும் 92 பேர் சாவடைந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 376 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று முன்தினம் உயிரிழந்த 92 பேரில் 15

## புலம்பெயர் அமைப்புகளை தடைசெய்துவிட்டு பேச்சா?



கேட்கிறார் கஜேந்திரகுமார் எம்.பி.

கொழும்பு, செப். 23

"தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தவுடன் ஏராளமான புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் தடைசெய்துவிட்டு, தற்போது உள்ளகப் பொறிமுறையில் பிரச்சினைகளைத் 15

## முகக்கவசம் அணியாதோருக்கு தண்டம் 5,000 ரூபா

யாழ்ப்பாணம், செப். 23

தீவிர நோய்ப்பரவலைத் தடுக்க தவறியமை மற்றும் சுகாதார நடமுறையைப் பின்பற்றாது, முகக்கவசம் அணியத் தவறிய ஐந்து பேருக்கு 15

### உபதவிசாளர் கரணமடித்ததால்

## வல்வெட்டித்துறை நகரசபையின் ஆட்சியை இழந்தது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், செப். 23

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவராக சுயேச்சைக் குழுவின் உறுப்பினர் சபாரத்தினம் செல்வேந்திரா தெரிவாகியுள்ளார்.

வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவு நகர சபைக்குரிய மண்டபத்தில் நேற்றுமுற்பகல் 10 மணிக்கு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலை 10

## வர்த்தகர்களுக்கு இனிமேல் ஆப்பு

சமர்ப்பிக்கப்பட்டது சட்டவரைவு

கொழும்பு, செப். 23

நிர்ணய விலையைமீறி பொருள்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு அதிகூடிய தண்டம் மற்றும் சிறைத் தண்டனை விதிக்கப்படும் சட்டவரைவு நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் நாடாளுமன்றில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற வர்த்தக அலுவல்கள் பற்றிய 15

## நாகர்கோவில் படுகொலை: 26ஆவது நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப். 23

நாகர்கோவிலில், மாணவர்கள் உட்பட 39 பேர் கொல்லப்பட்டதன் 26ஆம் ஆண்டு நினைவேந்தல் தமிழ்த் தேசியக் கட்சியின் அலுவலகத்தில் 10

## அங்கஜன், சுமந்திரனால் வீழ்த்தப்பட்டது தேசியம்

யாழ்ப்பாணம், செப். 23

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஒருவர் துரோகத்துக்கு விலைபோனதால், வல்வெட்டித்துறை நகர சபையின் ஆட்சி வீழ்த்தப்பட்டிருக்கிறது. அங்கஜன், சுமந்திரனின் ஆசீர்வாதத்தோடுதான் 10

## காணாமல் ஆக்கப்படுகின்றமை இனி நடக்காதவாறு பார்ப்போம்

இதுவே இறுதியான பதில் என்கிறார் அழகப்பெரும

கொழும்பு, செப். 23

காணாமல்போனவர்கள் தொடர்பாக எதனையும் மறைப்பதற்கில்லை. இது தொடர்பாக ஒன்றிணைந்த 10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி கோத்தாபயவுடன் பேச்சு நடத்துவதற்குத் தயார்!

## உலகத் தமிழர் பேரவை அறிவிப்பு

கொழும்பு, செப். 23

**புலம்பெயர்ந்த தமிழர்களுடன் பேச்சு நடத்த ஜனாதிபதி கோத்தாபய வெளியிட்டுள்ள விருப்பத்தை வரவேற்றுள்ள உலகத் தமிழர் பேரவை, ஜனாதிபதியின் மனமாற்றத்துக்குக் காரணம் என்னவென்றும் கேள்வி எழுப்பியுள்ளது.**

அதேவேளை, இலங்கையில் ஜனநாயக ரீதியில் தெரிவுசெய்யப்பட்ட தமிழ்ப் பிரதிநிதிகள் ஜனாதிபதியை சந்திப்பதற்கு வேண்டுகோள் விடுக்கும்போது அவை தாமதிக்கப்படுகின்றன. வலுவற்ற காரணங்களைத் தெரிவித்து நிராகரிக்கப்படுகின்றன எனவும் உலக தமிழர் பேரவை தெரிவித்துள்ளது.

அந்த அமைப்பு மேலும் தெரிவித்துள்ளதாவது ஆறு மாதங்களுக்கு முன்னர் உலகத் தமிழர் பேரவை உள்ளிட்ட அமைப்புகளையும் பலரையும் பயங்கரவாதிகள் என தெரிவித்தும் இலங்கை அரசு தடை செய்திருந்த நிலையில் ஏன் தற்போது மனமாற்றம்?

தனது வாக்காளர்களின் நிலைப்பாடுகளுக்கு மாறாக பெரும் நிலைப்பாட்டு மாற்றத்தை அறிவித்துள்ள ஜனாதிபதி, தனது நடவடிக்கைகளை எப்படியாவது நியாயப்படுத்த வேண்டிய நிலையேற்படும். அதுவே அவர் இந்த விடயத்தில் எதிர்கொள்ளப்போகும் முதல் சவால்.

புலம்பெயர்ந்த தமிழர்கள் பலரையும் மற்றும் அமைப்புகளையும் அரசு தடை செய்துள்ளதால் அதற்கு வருடாந்த இழப்பு 300 மில்லியன் டொலர் என எமது கணிப்பீடுகள் தெரிவிக்கின்றன.

முன்னாள் ஜனாதிபதி எங்களை இரண்டு தடவை லண்டனிலும் ஜேர்மனியிலும் சந்தித்தார்.

எங்கள் மக்களின் துயரங்கள் குறித்து - இலங்கை மக்களின் துயரங்கள் குறித்து நாங்கள் எவருடனும் பேசத் தயாராக உள்ளோம். ஜனாதிபதி எங்களுடன் நிலைமாறுகால நீதிபொறிமுறையின் உள்நாட்டு பொறிமுறை குறித்துப் பேச விரும்புகின்றார். நீதி மற்றும் நீதிசாராத நடைமுறைகளும் பொறிமுறைகளும் உள்ளன.

நீதிசார செயற்பாடுகள் மற்றும் உள்ளக பொறிமுறை குறித்து பேச்சு மேற்கொள்ள நாங்கள் தயாராகியிருக்கின்றோம். ஆனால், நீதித்துறை பொறிமுறையை பொறுத்தவரை என்ன செய்யவேண்டும் என ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவை தீர்மானம் தெளிவாக தெரிவித்துள்ளது என்று குறிப்பிட்டுள்ளது (த-இ)

# பல வருடங்களுக்குப் பின்னர் சபையில் கடுப்பாகிய ரணில்

## 'பைத்தியக்காரன்' என சொற்கணையும் தொடுப்பு

கொழும்பு, செப். 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பல வருடங்களுக்கு பிறகு நாடாளுமன்றத்தில் நேற்று கடும் சீற்றத்துடன் கருத்துகளை முன்வைத்தார். அத்துடன் 'பைத்தியக்காரன்' என்ற சொற்பதத்தையும் பயன்படுத்தினார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடியது. இதன்போது சிறப்புரிமை பிரச்சினையொன்றை எழுப்பிய ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ்,

"இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் அலுவலகத்துக்குள் அத்துமீறி நுழைந்த ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர், சொத்துகளுக்குச் சேதம் விளைவித்துள்ளனர். இதனால் எனக்கு உயிர் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வெலிக்கடை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தும் இன்னும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எனவே, இது தொடர்பில் சபாநாயகர் கவனம் செலுத்த வேண்டும்." என்று குறிப்பிட்டார்.

இதற்குப் பதிலளித்த ரணில் விக்கிரமசிங்க, தொழிற்சங்க விவகாரம் தொடர்பில் நீதிமன்றத்தில் இடம்பெற்ற வழக்கு சம்பந்தமாகவும் விவரித்தார். இதன்போது இடையிடையே வடிவேல் சுரேஷ் குறுக்கீடுகளை செய்தார். அமருங்கள், அமருங்கள் என பல தடவைகள் ரணில் கூறினார். வடிவேல் சுரேஷ் அடங்கவில்லை.

இதனால் சீற்றமடைந்த ரணில் விக்கிரமசிங்க, "பைத்தியக்காரனை அமர சொல்லுங்கள்" என இரு தடவைகள் குறிப்பிட்டார்.

ரணில் விக்கிரமசிங்க சபையில் பொறுமை இழந்ததில்லை எனவும், முறையற்ற சொற்பிரயோகங்களைப் பயன்படுத்தியதில்லை எனவும், பல வருடங்களுக்குப் பின்னரே இவ்வாறு செயற்பட்டுள்ளார் என்றும் அவருக்கு நெருக்கமானவர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர். (த-44)

## அநுராதபுரம் சிறை விவகாரம்

# சுயாதீன விசாரணைக்கு விசேட குழு அமைப்பு

*அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு*

கொழும்பு, செப். 23

அநுராதபுரம் சிறைச்சாலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணைக்காக ஓய்வுபெற்ற நீதியரசர் ஒருவர் தலைமையில் குழுவொன்று விரைவில் அமைக்கப்படும்.

இதற்கான கோரிக்கையை நீதி அமைச்சர் அலி சப்ரி அமைச்சரவையில் நேற்று முன்வைத்தார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முற்பகல் அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது. இதன்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

" இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவுடன் தொடர்புபட்ட சம்பவம் தொடர்பில் விசாரணை இடம்பெறுவதாக பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார். இதுவரை 23 பேரிடம் வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இந்த விவகாரம் தொடர்பில் அமைச்சரவையிலும் கலந்துரையாடப்பட்டது. அந்தவகையில் துரித விசாரணைக்காக ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் விசாரணைக்குழுவொன்றை அமைப்பதற்கு நீதி அமைச்சர் அலி சப்ரி அனுமதி கோரினார்.

மக்களின் நம்பிக்கையிலேயே அரசின் இருப்பு தங்கியுள்ளது. எனவே, அதனைப் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டியது மக்கள் பிரதிநிதிகளின் கடப்பாடாகும். எல்லா விடயங்களுக்கும் இந்த விடயம் பொருந்தும் எனவே, சிறைச்சாலை சம்பவம் தொடர்பில் அரசு உரியவகையில் செயற்படும். விசாரணை அறிக்கை கிடைக்கும்வரை மேலதிக விடயங்களை குறிப்பிட முடியாது. இது தொடர்பில் விழிப்பாக இருப்போம்." என்றார். (த-44)

# போதைப்பொருளுடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், செப். 23

400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் ஒருவர் நேற்றுமதியம் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று .பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாண மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலினடிப்படையில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் குறித்த இளைஞனின் உடமையில் இருந்து 400 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் சந்தேகநபரும் கைது செய்யப்பட்டார். நீர்வேலியைச்சேர்ந்த 22 வயது இளைஞன் கைது செய்யப்பட்டவராவார். அவர் சட்ட நடவடிக்கைக்காக சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளார். (த-26)

## மீன்பிடிக்க சென்றவர்

# குளக்கரையில் சடலமாக மீட்பு

வவுனியா, செப். 23

வவுனியா பம்பைமடு பகுதியில் குளத்தில் மீன்பிடிக்கச் சென்ற குடும்பஸ்தர் குளக்கரையிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மீன்பிடிப்பதற்காக நேற்றுக்காலை தனது வீட்டிலிருந்து சென்றுள்ளார்.

நீண்ட நேரமாகியும் அவரைக் காணாத உறவினர்கள் குளத்துப்பகுதியில் தேடியுள்ளனர். இதன்போது குளக்கரையில் அவர் சடலமாக கிடந்தமை கண்டறியப்பட்டது. இதே பகுதியைச் சேர்ந்த சிவசோதி (வயது - 55) என்ற குடும்பஸ்தரே இவ்வாறு சாவடைந்தார். சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் விசாரணை முன்னெடுத்து வருகின்றனர். (த-110)

# ஊடகவியலாளர் அந்தோனி மார்க் கொரோனாவால் காலமானார்



மன்னார், செப். 23

மன்னார் மாவட்டத்தின் மூத்த ஊடகவியலாளரும், தமிழ்த் தேசியப் பற்றாளருமான பீ.ஏ.அந்தோனி மார்க் (வயது 80) காலமானார்.

கொரோனாத் தொற்றுக் காரணமாக முல்லைத்தீவு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர், சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். அந்தோனி மார்க் அவர்கள் 32 வருடங்கள் காணி உத்தியோகத்தர் மற்றும் உதவி காணி ஆணையாளராகக் கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ம-213)

# யாழுக்குக் கடத்தப்பட்ட 350 கிலோ மஞ்சள் மீட்பு

யாழ்ப்பாணம், செப். 23

யாழ்ப்பாணம் குருநகர் கடற்பகுதி ஊடாக யாழ்ப்பாணத்துக்குக் கடத்தப்பட்ட 350 கிலோகிராம் மஞ்சள் கடற்படையால் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது, யாழ். குருநகர் ஐந்து மாடி கடற்பரப்பில் சந்தேகத்துக்கு இடமான படகு ஒன்றை அவதானித்த கடற்படையினர். அதனை பின்தொடர்ந்தபோது படகில் இருந்தவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். இதனையடுத்து கடற்படையினர் படகைச் சோதனையிட்டபோது அதில் மஞ்சள் இருப்பது அவதானிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடாளுமன்ற உறுப்புரிமை உட்பட

# லொஹானின் பதவிகள் பறிக்கப்படல் வேண்டும்

கஜேந்திரகுமார் எம்.பி. வலியுறுத்தல்

**கொழும்பு, செப். 23**

**அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை துன்புறுத்தியமைக்காக இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தவின் நாடாளுமன்ற உறுப்புரிமை உட்பட அனைத்துப் பதவிகளும் பறிக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார் நாடாளுமன்ற உறுப்பினரான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

சிறைக்கைதிகளின் உரிமைகளை உறுதிப்படுத்துகின்ற சர்வதேச சட்டங்களான மனித உரிமைகளுக்கான சர்வதேச பிரகடனம், குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச சாசனம், சித்திரவதை மற்றும் ஏனைய துன்புறுத்தல்கள், மனிதத்துவம் அற்ற, கீழ்நிலைப்படுத்தும் நடவடிக்கை மற்றும் சித்திரவதைகளிற்கு எதிரான சாசனம் போன்றவற்றில் இலங்கையும் கைச்சாத்திட்டிருக்கின்றது. இந்த பின்புலத்தில், பிரதமர் மற்றும் நீதி அமைச்சர் ஆகியோரிடம் சில கேள்விகளைக் கேட்க விரும்புகின்றேன். குறித்த நபர் இழைத்த குற்றவியல் நடத்தையின் பரிமாணத்தின் அடிப்படையில் அவர் சிறைச்சாலை மற்றும் சிறைக்கைதிகள் விவகார அமைச்சராக இருப்பதற்கு மட்டுமல்ல, எந்தவொரு அமைச்சுப் பதவியிலோ அல்லது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலோ இருக்க முடியாதவர் ஆகின்றார். அதன் அடிப்படையில், அவர் எந்தவொரு அமைச்சுப்பதவியிலும் இல்லாது இருப்பதையும் அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி நீக்கப்படுவதையும் உறுதிப்படுத்தும் நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் மேற்கொள்ளுமா?

குறித்த நபரின் இந்த செயற்பாடு குறித்தும் மீறப்பட்ட சட்டங்களின் அடிப்படையிலும், அவரை கைது செய்யவும் பொருத்தமான சட்ட நடவடிக்கைகளை எடுக்கவும் சட்டமா அதிபருக்கு எந்தவொரு புற அழுத்தமும் வழங்கப்படாது இருப்பதை இந்த அரசு உறுதிப்படுத்துமா?

முன்னைய அரசாங்கங்களை போலவே, இந்த அரசாங்கமும் பயங்கவாதத் தடைச்சட்டம் கொடூரமான இயல்புகளை கொண்டுள்ளது என்பதை ஏற்றுள்ளதன் அடிப்படையிலும், இந்த கொடூரமான பயங்கவாதத் தடைசட்டமானது, ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமை நியமங்களின் அடிப்படையிலும் உரிய நடைமுறைகளின் அடிப்படையிலும் வடிவமைக்கப்பட்டு இருந்தால், எந்தவொரு தமிழ் அரசியல் கைதிகளும் தடுத்து வைக்கப்பட்டிருக்கப்பட்டிருக்க மாட்டார்கள் என்பதையும் கருத்தில் கொண்டு, இந்த பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை உடனடியாக விடுவிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா? - என்றார். (ம)



ஐ.நா. அமர்வின்போது

## பீரிஸ் - பெய்ன் சந்தித்துப் பேச்சு

வொஷிங்டன், செப். 23

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையின் 76ஆவது அமர்வின்போது இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் ஆஸ்திரேலியாவின் வெளிவிவகார அமைச்சர் பெய்ன் இருவரும் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளனர். இது தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

ஆஸ்திரேலியாவின் தொழிற்கல்வி அனுபவத்தைப் பெற்றி அமைச்சர் பீரிஸ் வெகுவாகப் பாராட்டியுள்ளார். ஆட்கடத்தல் தொடர்பாகவும் இரு அமைச்சர்களும் கருத்துக்களைப் பகிர்ந்துகொண்டுள்ளனர். 'ஆட்கடத்தல் ஒரு மனிதாபிமானத் துயரம்' என்றும் அதைத் தடுப்பதற்கு இலங்கை மிகக் காத்திரமான நகர்வுகளை மேற்கொண்டு வருகின்றது என்றும் ஆஸ்திரேலிய அமைச்சரிடம் பீரிஸ் தெரிவித்துள்ளார் நாட்டின் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பொருளாதார அபிவிருத்தியிலும் நல்லிணக்கத்திலும் அதிக முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர் பீரிஸ் அமைச்சர் பெய்னிடம் தெரிவித்தார்.

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் மற்றும் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகம் தொடர்பான முன்னேற்றங்கள், தற்போதைய நிலவரத்தை மதிப்பிடுவதற்காக உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் தலைமையில் ஆணைக்குழுவொன்றை நியமித்தல் மற்றும் செயன்முறையை முன்னோக்கி எடுத்துச் செல்வதற்கான வழிகள் மற்றும் வழிமுறைகளை அடையாளம் காணுதல் போன்றன குறித்தும் அவர் விரிவாக விவரித்தார் என்றுள்ளது. (ம)

அதிகரித்த தொற்றாளர்களின் இறப்பு

## ஒரே நாளில் 8 சடலங்கள் தகனம்

வவுனியா,செப்.23

வவுனியாவில் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் அதிரித்துச் செல்லும் நிலையில் நிலமையை சீர்செய்யும் முகமாக சுகாதாரப் பிரிவினரும், நகரசபையினரும் இணைந்து நேற்று முன்தினம் 8 சடலங்களை தகனம் செய்தனர்.

வவுனியா மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக் காரணமாக தொடர்ந்தும் பலர் உயிரிழந்து வரும் நிலையில் அவர்களின் சடலங்கள் தேக்கமடைந்துள்ளன என்று சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். இந்த நிலையில், சடலங்கள் தேக்கமடைவதை தவிர்க்கும் பொருட்டு பூந்தோட்டம் மின் மயானத்தில் காலை 7 மணியில் இருந்து மாலை 8 மணி வரை சடலங்கள் தகனம் செய்யும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. இதன்படி 8 சடலங்கள் அதிக பட்சமாக ஒரே நாளில் தகனம் செய்யப்பட்டன. (ஐ-18)

## வீதி விபத்தில் ஒருவர் காயம்

கொடிகாமம்,செப்.23

உழவு இயந்திரமும் மோட்டார் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். இந்த விபத்து நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் புத்தூர் மீசாலை சந்தியில் இடம்பெற்றது. உழவு இயந்திரம் வீதியைக் கடக்க முற்பட்டபோது மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது. (ஐ-20)



## 104 கிலோ கேரளக் கஞ்சா இலுப்பைக்கடவையில் மீட்பு

மன்னார், செப். 23

இலுப்பைக்கடவை கத்தாளம் பிட்டி பகுதியில் 104 கிலோ கேரளக் கஞ்சா சிறப்பு அதிரடிப் படையினரால் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்டுள்ளது.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள இலுப்பைக்கடவை கத்தாளம் பிட்டி பகுதியில் வைத்தே இந்த கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.

எனினும் சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை. மீட்கப்பட்ட கஞ்சாப் பொதிகள் இலுப்பைக்கடவை பொலிஸ் நிலையத்தில் பாரப்படுத்தப்பட்டுள்ளன. (ம-56)

## கிராம அலுவலர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள்

உடன் நடவடிக்கை எடுக்கவேண்டுமென சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, செப். 23

சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராம அலுவலர்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரான சாணக்கியன் நேற்றுமுன்தினம் வலியுறுத்தினார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

'இலங்கையில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கொரோனாத் தொற்றால் உயிரிழந்துள்ளனர். அவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில்தான் தொற்றும் இறப்பும் மிகவும் குறைவாக உள்ளது. அதற்காக அரும்பாடுபட்டுப் பணியாற்றிக் கொண்டிருக்கும் சுகாதாரத் துறையினருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

உண்மையிலேயே பேசப்படாத ஒரு பிரிவினராக காணப்படும் கிராம அலுவலர்கள் பற்றியும் நாங்கள் பேசவேண்டும். சுகாதாரப் பரிசோதகர்களுக்கு வழங்கப்படுவது போன்று கிராம அலுவலர்களுக்கும் மேலதிக கொடுப்பனவுகளை வழங்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். (ம-213)

## அமெரிக்காவில் ஒலித்த 'மெனிகே மஹே ஹிதே'

கொழும்பு, செப். 23

இலங்கை பாடகி ஜொஹானி டி சில்வா பாடிய 'மெனிகே மகே ஹிதே' பாடலை அமெரிக்கர்கள் வெகுவாக விரும்பி ரசிக்கின்றனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்காவின் பிரபல வயலின் கலைஞர் கரோலினா ப்ரோட்சென்கோ, தெரு நிகழ்ச்சியில் இந்தப் பாடலை வயலின் மூலம் இசைத்துள்ளார். உலகப் புகழ்பெற்ற வயலின் கலைஞரான கரோலினா, கலிபோர்னியாவின் சான்டா மோனிகாவின் வீதிகளில் நிகழ்த்தும் சிறிய நிகழ்ச்சிகளால் பிரபலமானமை குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



## பல்கலை நுழைவுக்கான வெட்டுப்புள்ளி வெளியீடு

கொழும்பு. செப்.23
பல்கலைக்கழக நுழைவுக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளி விபரம் வெளியிடப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக பழைய மற்றும் புதிய பாடத்திட்டத்தின் அடிப்படையில் 2020 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இந்தப் புள்ளி வெளியிடப்பட்டுள்ளது.
இது தொடர்பான மேலதிக விபரங்களை www.ugc.ac.lk என்ற இணையளத்தளத்துக்குள் பிரவேசிப்பதன் மூலம் அறிந்து கொள்ள முடியும்.
இதேவேளை, பல்கலைக்கழக மாணவர்கள் முழுமையாக தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட பின்னர் பல்கலைக்கழகங்களை மீண்டும் திறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4)

# சினோஃபார்ம் தடுப்பூசியை நிராகரிக்கும் இளைஞர்கள்

**கொழும்பு, செப்.23**
**சினோஃபார்ம் தடுப்பூசியை விட பைஸர் அல்லது மொடர்னா தடுப்பூசிகளே அதிக செயற்றிறன் கொண்டவை என்று இளைஞர்கள் கருதுவதால், தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள ஆர்வம் காட்டவில்லை**




என்று பொதுச் சுகாதார ஆய்வாளர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
நாட்டில் தற்போது 20 தொடக்கம் 30 வயதுக்குட்பட்டவர்களில் 25 வீதத்துக்கும் குறைவான இளைஞர்களே தடுப்பூசி பெற்றுள்ளனர்.
கல்வி அல்லது வேலைவாய்ப்புக்காக வெளிநாடுகளில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தடுப்பூசிகளை எதிர்பார்ப்பதால், இளைஞர்கள் சினோஃபார்ம் தடுப்பூசியைப் பெறுவதைத் தவிர்க்கின்றனர்.
அத்துடன் தடுப்பூசிகள் கருவுறாமைக்கு வழிவகுக்கும் என்ற அச்சத்தாலும் ஆர்வம் காட்டவில்லை.
பல நாடுகள் பயணிகளுக்கான தடுப்பூசிக் கொள்கையை தளர்த்தியுள்ளன. எனவே ஏனைய விடயங்களுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கு முன்பு, முதலில் வைரஸிலிருந்து உயிரைப் பாதுகாப்பது அவசியம். -என்றார். (4)

## சிறுவர்களுக்கு நாளை தடுப்பூசி




கொழும்பு, செப்.23
12 முதல் 19 வயதுக்குட்பட்ட விசேட தேவையுடைய சிறுவர்கள் மற்றும் தீராத நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை நாளை வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளது.
இது தொடர்பில் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவிக்கையில்,
ரிஜ்வே சிறுவர் மருத்துவமனையில் முதற்கட்டமாக சிறுவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்படும்.
நாட்பட்ட நோய்களான நோயெதிர்ப்புக் குறைபாடு, நுரையீரல் நோய்கள், இதயம், கல்லீரல் மற்றும் சிறுநீரக நோய்கள், தலசீமியாவால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
மருத்துவ ஆலோசகர்களின் மேற்பார்வையின் கீழ் சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படும்.
12 வயதுக்குட்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி வழங்குவது தொடர்பில் இதுவரை எந்தத் தீர்மானமும் எடுக்கப்படவில்லை.
அத்துடன் நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டுள்ள 12 வயதுக்கும் மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை அடுத்த மாதம் 4 ஆம் திகதி முதல் நாடு முழுவதும் ஆரம்பிக்கப்படும்.
படிப்படியாக ஏனைய சிறுவர்களுக்கும் இந்த தடுப்பூசியை வழங்க சுகாதார அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. - என்றார். (4)



## கனேடியத் தேர்தலில் தமிழ்ப் பெண் வெற்றி

கொழும்பு, செப்.23
கனடா பொதுத் தேர்தலில் லிபரல் கட்சி சார்பில் களமிறங்கிய தமிழ் வம்சாவளிப் பெண்ணான அனிதா ஆனந்த் வெற்றி பெற்றுள்ளார்.
கனடாவில் இம்முறை இடம் பெற்றுள்ள பொதுத் தேர்தலில் ஜஸ்டின் ட்ரூடோ தலைமையிலான லிபரல் கட்சி வெற்றி பெற்றுள்ளது. (4)

## காணாமல்போன மோ.சைக்கிள் மீட்பு

கச்சார்வெளியில் தொலைந்து கரந்தாயில் கிடைத்தது

கிளிநொச்சி, செப் 23
கச்சார்வெளி பகுதியில் காணாமல் போன மோட்டார்சைக்கிள் கரந்தாய் பகுதியில் இருந்து பளை பொலிஸாரால் மீட்கப்பட்டது.
பளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கச்சார்வெளி கிராமத்தில் கடந்த 4ஆம் மாதம் வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார்சைக்கிள் ஒன்று காணாமல்போயுள்ளதாக பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டிருந்தது.
மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வந்த நிலையில் அந்த மோட்டார் சைக்கிள் கரந்தாய் பகுதியில் இருந்து கடந்த திங்கட்கிழமை மீட்கப்பட்டது.
காட்டுப்பகுதியில் மோட்டார் சைக்கிள் ஒன்று கைவிடப்பட்ட நிலையில் உள்ளது என்று பொலிஸாருக்கு பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே அந்த மோட்டார் சைக்கிள் மீட்கப்பட்டது.
உரியவரிடம் அதை பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ம-6)

## பாடசாலைகளை ஆரம்பிக்க சுகாதார வழிகாட்டல் தயார்

கொழும்பு, செப்.23
பாடசாலைகளை மீள ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டல்கள் தொடர்பான அறிக்கை கல்வி அமைச்சின் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.
அதற்கமைவாக 200 க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பாடசாலைகளில் ஆரம்பப் பிரிவுகளின் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதார வழிகாட்டுதல்கள் தயார்ப்படுத்தப்பட்டுள்ளன.
அதற்கான அறிக்கையே கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேராவிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## சந்தேகநபரை பிடிக்க முயன்ற பொலிஸ் அதிகாரி படுகாயம்

கொழும்பு, செப்.23
போதைப்பொருள் கடத்தல் தொடர்பான சந்தேகநபரைக் கைது செய்ய முயன்ற பொலிஸ் அதிகாரியொருவர் படுகாயமடைந்துள்ளார்.
இந்தச் சம்பவம் இராஜகிரிய ஒபயசேகரபுரப் பகுதியில் நடந்துள்ளது.
போதைப்பொருள் வர்த்தகர் ஒருவர் காரில் தப்பிச் செல்ல முயற்சித்த வேளை, அங்கிருந்த பொலிஸ் அதிகாரி, திரைப்பட பாணியில் காரின் முன்பக்கம் பாய்ந்து தொங்கிய நிலையில், சந்தேகநபரைக் கைது செய்ய முயற்சித்துள்ளார்.
சந்தேகநபர் காரை சுமார் ஒரு கிலோ மீற்றர் வரை செலுத்திச் சென்றுள்ளார். அதன்பின்னர் பொலிஸ் அதிகாரி காரிலிருந்து வீழ்ந்துள்ளார்.
சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி, பொலிஸ் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.
சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரைக் கைது செய்வதற்கான விசாரணைகளை பொலிஸார் ஆரம்பித்துள்ளனர்.
இந்தச் சம்பவம் அந்தப் பகுதியில் உள்ள பல சி.சி.ரி.வி கமராக்களில் பதிவாகியுள்ளது. (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா உயிரிழப்பு: 40 வீதம் வீழ்ச்சி

கொழும்பு,செப்.23

**கடந்த ஒரு மாதத்துக்குப் பின்னர் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் கணிசமான வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதுடன், குறித்த காலப்பகுதியில் உயிரிழப்புகளின் எண்ணிக்கையும் 40 வீதம் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.**

கடந்த 18 ஆம் திகதியுடன் முடிவடைந்த 28 நாள்களில் பெறப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.



சடுதியாக தொற்றாளர்கள் மற்றும் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வந்த நிலையில், தொடர் முடக்கம் நாட்டில் நடைமுறையில் உள்ளது. அதனால் இந்த வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று தொற்றுநோயியல் பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. (ஒ-4)

## டொலர் கடத்தலை தடுக்க நடவடிக்கை

விமான நிலையம் ஊடாக நாட்டில் இருந்து கொண்டு செல்லப்படும் பெருந்தொகை டொலரைத் தடுத்து நிறுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுங்கத் திணைக்களத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

விமானப் பயணி ஒருவர் 10 ஆயிரம் டொலரைக் கொண்டு செல்ல இன்னும் சட்ட ரீதியான அனுமதி உள்ளது. இலங்கை விமானப் பயணிகளில் 99 வீதமானவர்கள் 10 ஆயிரம் டொலரைத் தொடர்ந்தும் எடுத்துச் செல்கின்றனர். இலங்கையர்கள் நாட்டில் இருந்து கொண்டு செல்லும் டொலர் அவர்கள் நாடு திரும்பும் போது, விஸ்கி போன்ற மது பானங்களைக் கொண்டு வரும் போது செலவாகின்றது. வெளிநாடு செல்லும் நபர்களுக்கு ஆயிரம் டொலர் மாத்திரமே வழங்கப்படும் என்று தனியார் வங்கிகள் கூறினாலும், பலவர்த்தகர்கள்டொலரை வழங்கும் வேறு நபர்கள் மற்றும் நிறுவனங்களிடம் இருந்து அதிக விலைக்கு டொலரைக் கொள்வனவு செய்து நாட்டில் இருந்து எடுத்துச் செல்கின்றனர்.

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் பொருள்களை இறக்குமதி செய்ய டொலரைச் சேமிக்க வேண்டுமாயின், கூடிய விரைவில் சட்டத்தை உருவாக்கி, விமானத்தின் மூலம் வெளியில் செல்லும் டொலரைத் தடுத்து நிறுத்த ஆட்சியாளர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## இத்தாலி செல்ல முயன்ற இலங்கையர் இருவர் கைது



கொழும்பு,செப்.23

இத்தாலிக் குடியுரிமைக்கான போலி விசாக்களைப் பயன்படுத்தி ஐக்கிய அரபு எமிரேட்ஸ் டுபாய் வழியாக இத்தாலிக்குச் செல்ல முயன்ற இரண்டு இலங்கையர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.கைது செய்யப்பட்ட இருவரும் புத்தளம் தொடுவாவைப் பகுதியில் வசிப்பவர்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருவரும் விமான அதிகாரிகளுக்கு சமர்ப்பித்த ஆவணங்கள் தொடர்பாக எழுந்த சிக்கல்களால், விசாரணைக்காக விமான நிலையத்தில் உள்ள குடிவரவு மற்றும் குடியகல்வு துறையின் எல்லை கண்காணிப்புப் பிரிவுக்கு அனுப்பப்பட்டனர்.

அங்கு, ஆவணங்கள் தொழில்நுட்பச் சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டன. அதன் போது இத்தாலிக் குடியிருப்பு அனுமதி போலியானது என்பது உறுதி செய்யப்பட்டது.

அதிகாரிகளின் மேலதிக விசாரணையில், இதுவரை வெளிநாட்டில் இல்லாத இருவரின் கடவுச்சீட்டுக்களில் போலி இத்தாலி மற்றும் இலங்கை குடியேற்ற முத்திரைகள் இருந்தமை தெரியவந்தது. பின்னர் இருவரும் குடிவரவு மற்றும் குடியகல்வுத் துறையினரால் கைது செய்யப்பட்டு, மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமானநிலையத்தில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (ஒ-4)

# ஐ.நாவால் ஏமாற்றம்

## ஜனநாயகப் போராளிகள் கட்சி கவலை

யாழ்ப்பாணம்,செப்.23

ஐ.நாவில் எமக்கான தீர்வு கொண்டு வரப்படும். இலங்கை அரசுக்கு அழுத்தங்கள் கொடுக்கப்படும். இங்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு தீர்வு கிடைக்கும். அதன் ஊடாக தமிழர் உரிமைப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைப் பெற்றுக் கொள்ளலாம் என்று எதிர்பார்த்தோம். ஆனால் இம்முறையும் மிகுந்த ஏமாற்றத்தையே சந்தித்துள்ளோம்.

இவ்வாறு ஜனநாயகப் போராளிகள் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் செயலாளர் இ.கதிர் தெரிவிக்கையில்,

விடுதலைப் போராட்டத்தில் எந்தத் தொடர்பும் இல்லாதவர்களுடன் மனித உரிமைகள், மக்களின் உரிமைகள், போராளிகளின் நிலைப்பாடு தொடர்பாக தொடர்ச்சியாக பேசுவதில் எந்தப் பயனும் இல்லை. எதிர்காலத்தில் இவ்வாறான செயற்பாடுகளை நிறுத்திவிட்டு சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் தொடர்ச்சியாக பேச்சுக்களை நடத்தி உண்மைகளைக் கண்டறிந்து நீதிக்கான பொறிமுறையை உருவாக்குவது தான் பொருத்தமானதாக இருக்கும்.

தொடர்ச்சியாக ஐ.நாவில் கொண்டு வரப்படும் தீர்மானம் இலங்கையை அடிபணிய வைப்பதும், அச்சுறுத்துவதுமாகத்தான் இருந்தது. தீர்மானத்தை நிறைவேற்றும் விடயமாக அமையவில்லை.

இலங்கையை சர்வதேசத்தின் நிகழ்ச்சி நிரலுக்குள் கொண்டு சென்று, அதன் ஊடாக தங்கள் பூகோள ரீதியான அரசியலை நகர்த்துவதற்காக, தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேசம் கையாண்டு வருகின்ற தோற்றப்பாட்டைக் காணக்கூடியதாக இருக்கின்றது.

தொடர்ச்சியாக ஐ.நாவின் அமர்வு வரும் போது தமிழ்த்தேசியம் சார்ந்த அரசியல்வாதிகள் தங்களின் கட்சிக் கொள்கைகளையும், அரசியலையும் அந்தக் காலங்களில் முன்னெடுத்துச் செல்கின்றாறர்களே தவிர, போரின் பின்னர் சரணடைந்த போர்க்கைதிகள்,காணாமல் ஆக்கப்பட்டோர், போராளிகளின் மறுவாழ்வு நீதி விசாரணைகள் தொடர்பில் எந்த முன்னேற்றத்தையும் இந்த அரசு செய்யவில்லை. அதற்கு சர்வதேச சமூகம் அழுத்தம் கொடுக்க முன்வரவில்லை.

போருக்குப் பின்னர் பத்து ஆண்டுகளாகியும், முன்னாள் போராளிகள் இன்று ஒரு அரசியல் கட்டமைப்பாக நாட்டில் செயற்பட்டு வருகின்றனர். எம்மோடு இலங்கை அரசு உத்தியோகபூர்வமாக எந்தப் பேச்சுவார்த்தையிலும் ஈடுபடவில்லை. அதேபோன்று சர்வ தேசச் சமூகமும் உண்மைகளைக் கண்டறிவதற்காக எந்த சாட்சியங்களையும் பதிவு செய்து கொள்ள விரும்பவில்லை.

உள்நாட்டுப் பொறிமுறை என்பதை நாங்கள் ஒருபோதும் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இங்கு பல ஏமாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. எனவே சர்வதேசரீதியாக நீதி விசாரணையை நிலைநாட்ட பன்னாட்டுச் சமூகம் முன்வர வேண்டும்.

தமிழர்களின் சுயநிர்ணய உரிமை கோட்பாடு அனைத்தும் உலகநாடுகளால் நிராகரிக்கப்பட்டு, இலங்கையின் ஆட்சி அதிகாரங்களுக்கு கீழ் ஒற்றையாட்சி முறையை ஏற்றுக்கொண்டு தமிழர்கள் அடக்கு முறைக்குள் வாழ வேண்டும் என்ற செய்தியை உலகம் தமிழ் மக்களுக்கு சொல்லி நிற்பதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

இந்தியா அரசின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த தவறியுள்ளது. மாகாண சபைத் தேர்தலை நடத்தி ஒரு ஜனநாயக ஆட்சியைக் கொண்டுவர அரசு முன்வரவில்லை. தொடர்ந்தும் மத்திய அரசின் அடக்குமுறைக்கு கீழ் தமிழர்களை அடக்கி ஆள்வதற்காக புதிய சட்டங்களையும், அரசியல் வரைவுகளையும் மாற்றி எழுதுவதுதான் அரசின் நோக்கமாக இருக்கின்றது.

இவ்வாறான நிலையில் தமிழர்களுக்கு ஒரு சட்டம், உலக நாடுகளுடன் ஒரு சட்டம் என்று நாட்டை வழிநடத்திக்கொண்டிருக்கும் கோத்தாபய ராஜபக்ச, உலக அரங்கில் தான் ஒரு ஜனநாயக வாதி என்பதை நிலை நாட்டுவதற்காக உரையாற்றச் சென்றுள்ளார்.

இதற்கு சர்வதேச ரீதியில் செயற்படும் தமிழ் அமைப்புக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

எங்கள் தேசியத் தலைவர் உலகத்தின் எந்த வல்லாதிக்க சக்திகளுக்கும் அடிபணியாது கொண்ட கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட தமிழ் தேசியக் கூட்டமைப்பு தமிழ் தேசிய அரசியல் அனைத்தும் தொடர்ந்தும் பலம் மிக்க சக்தியாக செயற்படுவதற்கு மக்கள் தயாராக இருக்க வேண்டும். என்றார். (ஒ-4-19)

# மின் பாவனையாளர்களுக்கு மாதாந்தக் கட்டணத்தில் சலுகை

கொழும்பு,செப்.23


நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்குள், மின் கட்டணத்தை செலுத்த முடியாத, மின் பாவனையாளர்களுக்கு 24 மாதங்களில் தவணை அடிப்படையில் கட்டணத்தைச் செலுத்த சலுகைக் காலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிலுவையில் உள்ள மின் கட்டணங்களின் மாதாந்த தவணைக்கு சிறிய வட்டி வசூலிக்கப்படும். அது தொடர்பில் விரைவில் பாவனையாளர்களுக்கு அறிவிக்கப்படும்.

கடந்த இரண்டு மாதங்களில் இலங்கை மின்சார சபைக்கு 44 பில்லியன் ரூபா செலுத்த [illegible] வேண்டியிருந்தது. மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தக்கூடிய மக்கள் கூட தங்கள் மின்சாரக் கட்டணத்தைச் செலுத்தவில்லை. அதனால் நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளோம்.

அதேவேளை ஜனாதிபதியின் கருத்தின் படி, 2030 ஆம் ஆண்டுக்குள் சூரிய மற்றும் காற்றாலை மின் உற்பத்தியை 70 வீதம் சுற்றுச்சூழலுக்கு உகந்த வகையில் அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. - என்றார். (ஒ-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதுக்கடைகளை பூட்டினால் சீனியின் விலையே எகிறும்

## அமைச்சரின் கண்டுபிடிப்பு

கொழும்பு, செப்.23

**மதுபானசாலைகளை இரண்டொரு தினங்களுக்குள் முழுமையாகத் திறக்க வேண்டும். இல்லையெனில் சீனியின் விலையே அதிகரிக்கும் என்று அமைச்சர் சந்திரசேன தெரிவித்துள்ளார்.**

மதுபானசாலைகள் பல மாதங்களாக மூடப்பட்டிருந்தாலும், மதுப்பிரியர்கள் குடிப்பழக்கத்தைக் கைவிடப்போவதில்லை.

அதிக விலைக்கு சீனியை வாங்கி உடலுக்குத் தீங்கு விளைவிக்கும் கசிப்பை வடிகட்ட முயல்வார்கள்.

எனவே, மதுபானக் கடைகளை ஓரிரு நாள்கள் அரசு முழுமையாகத் திறக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (4)

## பிறந்து 5 நாள்களான சிசு கொரோனாவால் உயிரிழப்பு

கொழும்பு, செப். 23

மொனராகலை மாவட்ட மருத்துவமனையில், 21 வயதான தாயொருவர் பிரசவித்த இரட்டைக் குழந்தைகளுள் ஒன்று, பிறந்து ஐந்தே நாள்களில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தது.

கடந்த 13ஆம் திகதி குறித்த தாய் மேற்படி இரட்டைக் குழந்தைகளைப் பிரசவித்துள்ளார்.

பிரசவம் நடைபெற்று நான்கு நாள்களின் பின்னர் தாய்க்கு மேற்கொண்ட கொரோனா பரிசோதனையில் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதையடுத்து குழந்தைகளில் ஒன்றுக்குத் தொற்று உறுதியானது. அந்தக் குழந்தையே கொரோனாவால் உயிரிழந்தது. (ம)



## பள்ளிவாசல் காணியில் விளையாட்டு மைதானம்

### பள்ளி நிர்வாகம் விசனம்

மன்னார், செப்.23

முசலி சிலாபத்துறை புது வெளிப்பகுதியில் உள்ள முஸ்லிம் மையவாடிப் பகுதியில், கரப்பந்தாட்ட மைதானத்தை அமைப்பதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இதனை உடனடியாக நிறுத்துமாறு கோரி முசலி மஸ்ஜிதுத் தக்வா ஜும்ஆப் பள்ளிவாசல் நிர்வாகம், மன்னார் மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பள்ளிவாசல் நிர்வாகத்தினர் தெரிவிக்கையில்,

பள்ளிவாசலுக்குச் சொந்தமான சுமார் 2 ஏக்கர் காணியில் பாலர் பாடசாலை, பள்ளிவாசல், மையவாடி போன்றவை அமைந்துள்ளன.

எனினும் மையவாடிக்கு என ஒதுக்கப்பட்ட காணிக்குள் கரப்பந்தாட்ட மைதானம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கு கிராம மக்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ள போதும், அதிகாரிகள் மைதானத்தை மையவாடி பகுதியில் அமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இதனைத் தடுத்து, வேறு இடத்தில் மைதானத்தை அமைக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என்றனர்.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தெரிவிக்கையில், குறித்த பள்ளிவாசல் நிர்வாகத்தினர் இந்த விடயத்தைத் தெரியப்படுத்தியுள்ளனர். இது தொடர்பில் ஆராய்ந்து துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முசலி பிரதேச செயலருக்கு அறிவித்துள்ளேன்.

-என்றார். (4-56)

## ரிஷாத்துக்கு மீண்டும் மறியல்

கொழும்பு, செப்.23

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு மீண்டும் விளக்கமறியல் உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு கொழும்பு நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்று வருகின்றது.

இதன் போது ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் பிரியந்த லியனகே உத்தரவிட்டார். (4)

## விகாரை மீது மின்னல் தாக்குதல்


இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க பொலனறுவையிலுள்ள லங்காதிலக்க விகாரையின் கட்டடத்தின் மீது மின்னல் தாக்கம் ஏற்பட்டு கட்டடம் சேதமடைந்துள்ளது.

விரைவில் கட்டடம் புனரமைக்கப்படும் என்று தொல்பொருள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இங்கு தனித்துவமான பௌத்த நினைவுச்சின்னங்கள் வைக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அநுர மனதுங்க தெரிவித்துள்ளார். (4)

## பால்மாவின் விலையை அதிகரிக்க முடிவில்லை

### நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, செப். 23

இறக்குமதி செய்யப்படும் பால்மாவுக்கான விலையை அதிகரிப்பதற்கு இதுவரை தீர்மானிக்கப்படவில்லை என நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன தெரிவித்துள்ளார்.

ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 200 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழுவிலேயே தீர்மானிக்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலக சந்தையில் பால்மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் இறக்குமதி செய்யப்படும் பால்மாவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதிக்குமாறு பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்கள் கடந்த ஒரு மாதகாலமாக கோரிவருகின்றன.

விலை அதிகரிக்க அனுமதிக்கப்படாதமையால் அவர்கள் தற்போது இறக்குமதியை மட்டுப்படுத்தி இருக்கின்றனர்.

அதனால் சந்தையில் கடந்த சில வாரங்களாக பால்மாவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் பால்மா இறக்குமதி செய்யும் நிறுவனங்களுக்கும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்சவுக்கும் இடையில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றுள்ளது.

உலக சந்தையில் பால்மா விலை அதிகரிக்கப்பட்டிருப்பது, கப்பல் கட்டணம் அதிகரித்திருப்பது, ரூபாவுடன் ஒப்பிடுகையில் டொலரின் பெறுமதி அதிகரித்திருப்பது போன்ற காரணங்களுக்கமைய ஒரு கிலோகிராம் பால்மாவின் விலையை 350 ரூபா வரை அதிகரிப்பதற்கு அனுமதி கோரியுள்ளனர்.

என்றாலும் சந்தை நிலைமை மற்றும் இறக்குமதி வரி தொடர்பிலான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் ஒரு கிலோ பால்மாவின் விலையை 200 ரூபா வரை அதிகரிப்பது தொடர்பில் கொள்கையளவில் இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இருந்தபோதும் பால்மாவுக்கான விலை அதிகரிப்பிற்கு நுகர்வோர் அதிகார சபை இதுவரை அனுமதி வழங்கவில்லை. எதிர்வரும் வாரத்தில் வாழ்க்கைச் செலவு தொடர்பான அமைச்சரவை உபகுழு இதுதொடர்பாக கலந்துரையாடிய பின்னரே விலை அதிகரிப்பது தொடர்பில் தீர்மானிக்கப்படும்

- என்றார். (ம)

## நிகழ்நிலை ஊடாக மாணவர்கள் வரவேற்பு



யாழ்ப்பாணம், செப்.23

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைப்பீடத்தின், சட்டத்துறையில் பயில்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள புதுமுக மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வு நேற்று முன்தினம் நிகழ்நிலை ஊடாக இடம்பெற்றது. சட்டத்துறைத் தலைவர் திருமதி துஷானி சயந்தன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில், பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா, பதிவாளர் வி. காண்டீபன், கலைப் பீடாதிபதி கலாநிதி கே. சுதாகர், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி. ராஜஉமேஷ், பதில் நூலகர் திருமதி ச. கல்பனா ஆகியோர் கலந்துகொண்டு, புதுமுக மாணவர்களுக்கான வழிகாட்டுதல்களை வழங்கினர். மாணவர் ஒழுக்காற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் கே. வேலாயுதமூர்த்தி, சட்டத்துறை விரிவுரையாளர்கள், சட்டத்துறை மாணவர்கள், புதுமுக மாணவர்கள் உட்பட பலர் நிகழ்நிலை ஊடாகக் கலந்து கொண்டனர். (4-20)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## இதுவா பதில்?

சத்தியவானின் ஆயுட்காலம் முடிந்ததால் அவன் உயிரை யமதர்மன் கவர்ந்து சென்றுகொண்டிருந்தான். ஆனால் கற்பின் மகிமையால், சத்தியவானின் மனைவியான சாவித்திரி இந்தக் காட்சியைக் கண்டுவிட்டாள். அவள் யமதர்மனை விடுவதாயில்லை.பின்தொடர்ந்து தன் கணவன் உயிரைத் திரும்பத் தரும்படி மன்றாடினாள். ஆனாலும் "கவர்ந்த உயிரைத் தரமுடியாது வேறு வரம் கேள்.தருகிறேன்" என்றான் யமதர்மன். இப்படி யமன் கேட்கும் போதெல்லாம் இழந்த நாடு, தன் கணவனின் பெற்றோருக்கு பறிபோன பார்வைப்புலன் என்பவற்றோடு தனக்கான பிள்ளை வரத்தையும் அவள் யமனிடம் சாமர்த்தியமாக வாங்கிக் கொண்டாள். இறுதியில், " எனக்கு குழந்தை வரம் தந்தீர்களே,கணவர் இல்லாமல் குழந்தை எப்படி கிடைக்கும்?" என யமனை மடக்கி, கணவன் உயிரை மீண்டும் பெற்றாள் சாவித்திரி. அப்படி பறித்த உயிரையே யமதர்மன் கொடுத்த கதைகள் இருக்கையில், படைகளின் கைகளில் உயிரோடு ஒப்படைத்தவர்களுக்கு மரணச்சான்றிதழ் கொடுக்கப்போவதாக அபத்தமாக ஐ.நா. பொதுச்செயலர் முன்பாக உளறிக்கொட்டியிருக்கிறார் இலங்கை ஜனாதிபதி கோத்தாபய.


இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரின்போது காணாமல் ஆக்கப்பட்டோருக்கு இறப்புச் சான்றிதழ்களும் இழப்பீடுகளும் வழங்கப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலரிடம் ஜனாதிபதி கோத்தாபய தெரிவித்த கருத்தானது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை கண்டுபிடித்துத் தருமாறும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்துமாறும் கோரி போராடிவரும் உறவுகளிடையே பெரும் அனலை ஏற்படுத்தியுள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டோருக்காக தொடர்ச்சியாக உணவுத் தவிர்ப்புப் போராட்டத்திலும் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டுவரும் உறவுகள், தமது உறவுகள் இறந்துவிட்டனர் என்று அங்கீகரிக்குமாறு தம் போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. அத்துடன் உறவுகளுக்கான பிரதியீடாக இழப்பீடுகள் எதையும் அவர்கள் கோரவில்லை. இந்த அடிப்படை நியாயத்தை அரசும் மிகமுக்கியமாக, கொழும்பால் அடிக்கடி ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கும் சர்வதேசமும் புரிந்துகொள்ள வேண்டும். அத்துடன் மரணச் சான்றிதழும் வேண்டாம், இழப்பீடும் வேண்டாம் என்பது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஆரம்பம் முதலே வெளிப்படுத்திவரும் தெட்டத்தெளிவானதும் ஆணித்தரமானதுமான நிலைப்பாடு.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடும், இறப்புச் சான்றிதழும்தான் வழங்கப்படும் என்றால், இந்த விவகாரத்தில் உச்சப்பாதிப்பை எதிர்கொண்ட அவர்களின் உறவினர்களுடன் கலந்தாலோசித்து விட்டுத்தான் தீர்க்கமான முடிவுக்கு வரமுடியுமே தவிர கோரிக்கை ஒன்றாகவும் தீர்வு ஒன்றாகவும் அமைதல் சுத்த அபத்தம்.

இறுதிப் போரின்போது படையினரின் அறிவிப்பை அடுத்து அவர்களிடம் உயிருடன் ஒப்படைக்கப்பட்ட தம் பிள்ளைகள் எங்கே என்று இன்று பலநூறு தாய்மார்கள் கேள்வி கேட்கின்றனர். தம் கைகளால் ஒப்படைத்தவர்களுக்கு என்னாயிற்று என்பது அவர்களின் இதயத்தை அன்றாடம் கிழித்துத் தொங்கவிடும் கேள்வியாகவுள்ளது. அதற்கு உரிய ஆற்றுப்படுத்தலை வழங்க கொழும்பும் முன்வரவில்லை, தன் சக்திக்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கச் சர்வதேசமும் முன்வரவில்லை. இப்படியிருக்கையில் வெந்த புண்ணில் வேல் பாய்வதைப்போன்று காணாமல் ஆக்கப்பட்டவர்கள் இறந்துவிட்டனர் என்ற பொதுமையான பிம்பத்தை மெல்லமெல்லக் கட்டமைக்க - கட்டியெழுப்ப முனைவது துரோகத்திலும் பெரும் துரோகம். இதை கொழும்பு தவிர்க்க வேண்டும், இந்தக் கபட நாடகத்தை சர்வதேசம் இனங்கண்டு தெளிந்த மனநிலையில் இவ்விவகாரத்தை அணுக வேண்டும்.

அதைவிடுத்து,சர்வாதிகாரத்தனத்தோடு காணாமல் ஆக்கப்பட்டோருக்கு மரணச்சான்றிதழ் கொடுத்து, அந்த விடயத்தை அப்படியே மூடிமறைக்க நினைத்தால், அது இன்னும் நிலைமைகளை பாரதூரமாக்குவதோடு,காலம் முழுதும் இலங்கை ஐ.நா.வுக்கு பயந்தே சாக[illegible] சூழமையையும் உருவாக்கி விடும்.




# 12 தமிழ் இளைஞர்களை நிர்வாணமாக்கி சோதனை

## சபையில் கஜேந்திரன் எம்.பி. சீற்றம்

**கொழும்பு,செப்.23**

**பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள், நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களை விசாரணையின் கீழ் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன் தெரிவித்தார்.**



நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்றிருந்த இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த, தமிழ் அரசியல் கைதிகளை ஓரிடத்துக்கு வருமாறு அழைத்து, அவருக்கு முன்பாக முழந்தாளில் இருக்குமாறு கட்டளையிட்டு, அச்சுறுத்தி அவர்களின் தலையில் துப்பாக்கி வைத்து மிரட்டியுள்ளார்.

ஜனாதிபதி எனக்கொரு அதிகாரத்தை வழங்கியுள்ளார். அதன்படி விரும்பினால் உங்களை விடுதலை செய்யலாம். அல்லது சுட்டுக்கொல்லலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்த 12 தமிழ் இளைஞர்கள் கொழும்பு மறியல் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் நிர்வாணமாக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். 541 நாள்கள் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரின் விசாரணையின் கீழ் மிகக் கொடூரமான சித்திரவதைகளுக்கு உள்ளாகியுள்ளனர். இதுவொரு பாலியல் சித்திரவதையே. இது தொடர்பில் விசாரணை நடத்த வேண்டும்.

இதேவேளை ஜனாதிபதி ஐ.நா. பொதுச் செயலாளரைச் சந்தித்த போது, காணாமல் போனோருக்கு மரணச் சான்றிதழை வழங்குவதாக கூறியுள்ளார். இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். அரசு கடந்த செப்ரெம்பர் மாதத்தில் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று ஜெனிவாவில் வாக்குறுதியளித்திருந்தது. ஆனால் அந்தப் பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்பட வில்லை. அதனை நீக்க வேண்டும் என்று ஐ.நா. கூறியுள்ளது. இன்றும் அந்த சட்டத்தில் தடுத்து வைத்திருப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. அவர்கள் அனைவரையும் விடுவிக்க வேண்டும் - என்றார்.

# ஆட்சியைக் கவிழ்க்க சூழ்ச்சி செய்யவில்லை

## நழுவுகிறார் ஜகத் குமார

கொழும்பு,செப்.23

அரசுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கோ, ஆட்சியைக் கவிழ்ப்பதற்கோ நான் சூழ்ச்சி செய்யவில்லை என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத்குமார தெரிவித்துள்ளார்.

அமைச்சர்களான காமினி லொக்குகே, சரத் வீரசேகர ஆகியோருக்கும், நாடாளுமன்ற உறுப்பினர் ஜகத் குமாரவுக்கும் இடையில் கருத்து மோதல் உச்சம் தொட்டுள்ளது. இதனால் அரசுக்குள் முறுகல் நிலையும் ஏற்பட்டுள்ளது என்று தகவல் வெளியாகியுள்ளது. இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஒரு சம்பவத்தை அடிப்படையாகக் கொண்டே இரு அமைச்சர்களுக்கு எதிராக குற்றச்சாட்டை முன்வைத்தேன். அந்த நிலைப்பாட்டிலேயே இன்றும் இருக்கின்றேன். இந்த விடயத்தில் ஊடகக் கண்காட்சி எதுவும் இல்லை. உண்மையையே நான் சொன்னேன்.

எனது அறிவிப்பானது அரசை வீழ்த்துவதற்கோ அல்லது அரசுக்குள் பிளவை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கையோ அல்ல. எமது அரசு கூட்டணி அரசாகும். எனவே, கருத்துச் சுதந்திரத்துக்கு இடமிருக்கின்றது - என்றார். (ஒ-4-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மண்ணில் 09.03.1939

விண்ணில் 24.08.2021

## அமரர் திரு. நவரத்தினம் பரமு

(ஓய்வு பெற்ற தபாலதிபர்)

திதி : துதியை

ஊர் முழுதும் உங்கள் பெயர் நிறைந்திருக்கும்
உறவுகளின் உதட்டோரம் உங்கள் நாமம்
பெயர் விளங்க பிள்ளைகளும். பேரர்களும்
பிரிய மனமில்லாமல் இணைந்திருக்க
தாரம் என்ற துணையாளும் காத்திருக்க
தரணிவிட்டகன்று நீங்கள் ஒரு மாதமாச்சே...
பாதம் தொட்டு பணிந்தெழுந்து அஞ்சலிகள்
பண்புடனே தருகின்றோம் அமைதி கொள்க.

குடும்பத்தினர்
23, தேவாலய வீதி, கொக்குவில்.



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

## அமரர் திருமதி யோகேஸ்வரன் இந்திராணி

மண்ணில் : 07.04.1952

விண்ணில் : 24.08.2021



எமது குடும்பத்தின் ஒளிவிளக்காய், எமது வாழ்வில் ஒளியேற்றிய தெய்வமே உங்கள் அழகிய தோற்றமும், சிரித்த முகமும், கனிவான பேச்சும் எமது கண்முன்னே நிழலாடுகிறதே! இவ்வளவு சீக்கிரத்தில் எம்மை விட்டுப் பிரிவீர்கள் என நாம் கனவிலும் நினைக்கவில்லை. உங்கள் நினைவுகள் எம் உயிர் உள்ளவரை அழியாது. நீங்கள் காட்டிய பாதையில் நாம் எமது மிகுதிப் பயணத்தை தொடர்கின்றோம். உங்கள் ஆத்மா சாந்தி பெற நாம் என்றும் பிரார்த்திக்கின்றோம்.

குடும்பத்தினர்.

"ஆனந்தவாசா"
03ம் கட்டை, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.


# பெரும்போகத்துக்கு இயற்கை உரங்கள்

கொழும்பு, செப். 23

எதிர்வரும் பெரும்போகத்தில் இருந்து உயர்தர இயற்கை உரங்கள் விவசாயிகளுக்கு விநியோகிக்கப்படும் என்று விவசாயப் பணிப்பாளர் நாயகம் அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

இயற்கை உர இறக்குமதி தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு பதிலளித்துள்ள அவர், இறக்குமதி செய்யப்பட்ட இயற்கை உரம் பாதுகாப்பானது. இதனால் நாட்டுக்குத் தீங்கு ஏற்படாது. இவற்றை வெளிநாட்டில் சோதனைக்கு உட்படுத்தினாலும், இலங்கையிலும் மீண்டும் சோதனைக்கு உட்படுத்தப்படும்.

எனவே விவசாயிகளுக்கு எந்தப் பயமும் தேவையில்லை. விவசாய நோக்கங்களுக்காக உயர்தர உரங்கள் வழங்கப்படுவதை நாம் உறுதி செய்வோம் - என்றார். (ஒ-4)

# கோவிட் தடுப்பூசி செலுத்துவதில் இளையோருக்கு ஆர்வம் இல்லை

## சுகாதார அதிகாரிகள் கவலை



கொழும்பு,செப்.23

**கொரோனா தடுப்பூசி செலுத்திக்கொள்வது குறித்து 20 முதல் 29 வயதுக்கு உட்பட்ட இளையோர் எந்தவித அக்கறையுமின்றி காணப்படுகின்றனர் என்று சுகாதார அதிகாரிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது; இந்த வயதுடைய இளையோர் கருவள குறைபாடு ஏற்படலாம் என அஞ்சுவதுடன், ஒரு சிலர் ஆராய்ச்சிகள் மூலம் உறுதி செய்யப்படாத இயற்கை மருத்துவமுறைகளை பயன்படுத்துகின்றனர்.

20 முதல் 29 வயதுக்குட்பட்டவர்களில் 40 வீதமானவர்கள் மாத்திரமே தடுப்பூசியை பெற்றுக்கொண்டுள்ளனர்.

டெல்டா வைரஸ் பல உயிர்களை காவு கொண்டுள்ள நிலையில் அனைவருக்கும் தடுப்பூசியை செலுத்துவதற்கு முயலும் நிலையில் இந்த எண்ணிக்கை மோசமானதாகக் காணப்படுகிறது.

கடந்த மாதத்தில் உயிரிழந்தவர்களில் 95 வீதமானவர்கள் தடுப்பூசி செலுத்திக்கொள்ளாதவர்கள் என புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்தியுள்ளன. இளைஞர்கள் மத்தியில் தடுப்பூசி செலுத்துவதற்கான ஆர்வம் இல்லாததால் தடுப்பூசி செலுத்தப்படும் நிலையங்கள் வெறிச் சோடிய நிலையில் காணப்படுகின்றன.

நாடு வழமைக்கு திரும்பவேண்டும் என்றால் அனைவரும் தடுப்பூசியை பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றனர். (ஐ-இ)

# கிளி. மருத்துவமனைக்கு சுகாதாரப் பொருள்கள்



கிளிநொச்சி,செப்.23

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் கடந்த திங்கட் கிழமை கையளிக்கப்பட்டன. படுக்கை மெத்தைகள், போர்வைகள், கொரோனாப் பாதுகாப்பு அங்கிகள், கொரோனாப் பாதுகாப்புப் பொருள்கள் உள்ளிட்ட பொருள்கள் கையளிக்கப்பட்டுள்ளன.

மக்கள் விடுதலை முன்னணியின் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களின் கட்சி அமைப்பாளர்கள் குறித்த பொருள்களை, மாவட்ட மருத்துவமனைப் பணிப்பாளரிடம் கையளித்தனர். (ஒ-4-6)

# அரசியல் கைதிகளை விடுவிக்க கோரிக்கை

தன்னை விடுவித்தது போன்று சிறையில் உள்ள ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று, அண்மையில் விடுதலை செய்யப்பட்ட நடேசு குகநாதன் வேண்டுகோள் முன்வைத்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டம், புதுக்குடியிருப்பு உடையார்கட்டைச் சேர்ந்த நடேசு குகநாதன் கடந்த 16ஆம் திகதி கொழும்பு நீதிவான் நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டார். இவர் கடந்த 8 ஆண்டுகளாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களத்தின் பரிந்துரைக்கு அமைய தற்போது விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 17ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் பொறுப்பேற்கப்பட்ட அவர், தற்போது குடும்பத்தினருடன் சேர்க்கப்பட்டுள்ளார்.

தன்னைக் குடும்பத்தினருடன் இணைத்தமைக்கு நன்றி தெரிவித்துள்ள அவர், சிறையில் 15 முதல் 20 ஆண்டுகளாக அடைக்கப்பட்டிருக்கும் ஏனைய தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார். (எ-19)

# தடுப்பூசிக்கு காலக்கெடு

கொழும்பு, செப். 23

30 வயதுக்கு மேற்பட்டவர்கள் இந்த வாரத்துக்குள் கொரோனாத் தடுப்பூசி செலுத்திக் கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இளைஞர்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதால் தடுப்பூசி வழங்கும் நிலையங்கள் தொடர்ந்தும் செயற்பட முடியாது என்று இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன தெரிவித்துள்ளார்.

எனவே 30 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒரு வாரத்துக்குள் தடுப்பூசியை செலுத்திக் கொள்ள வேண்டும். 30 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்குவதை கடந்த வாரமே பூர்த்தி செய்யத் தீர்மானித்திருந்தோம் எனினும் மேலும் ஒரு வாரம் நீடிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ-4-ரி1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்**: தந்தைவழியில் தேவையற்ற செலவுகள் ஏற்படக்கூடும். சிலருக்கு வயிறு தொடர்பான பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், உணவு விஷயத்தில் கவனமாக இருக்கவும்.

**இடபம்**: அதிர்ஷ்டகரமான நாள். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். சகோதர வகையில் எதிர்பாராத ஆதாயம் கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால்அனுகூலம் உண்டாகும். மகிழ்ச்சியுடன் செலவுகளும் ஏற்படும்.

**மிதுனம்**: உடல்நலனில் கவனம் தேவை. நண்பர்கள் உதவி கேட்டு வருவார்கள். தாய்மாமன் வழியில் எதிர்பாராத செலவுகள் ஏற்படக்கூடும். ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**கடகம்**: அரசாங்கக் காரியங்கள் இழுபறியாகி முடியும். புதிய முயற்சிகளைத் தவிர்க்கவும். வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். இளைய சகோதர வகையில் ஆதாயம் உண்டாகும்.

**சிம்மம்**: எதிலும் பொறுமையுடன் சிந்தித்துச் செயல்பட வேண்டிய நாள். சிலருக்கு திடீர் செலவுகளால் கையிருப்பு குறையும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகள் எடுப்பதைத் தவிர்க்கவும்.

**கன்னி**: எந்த முடிவையும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்து எடுப்பது நல்லது. குடும்பத்தில் மற்றவர்களுடன் அனுசரித்துச் செல்லவும். சிறு சிறு பிரச்சினைகள் ஏற்படக்கூடும்.

**துலாம்**: உற்சாகமாகச் செயல்படுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளை நிறைவேற்ற செலவு செய்ய நேரிடும். சகோதர வகையில் சில சங்கடங்கள் ஏற்படும்.

**விருச்சிகம்**: அனுகூலமான நாள். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். வாழ்க்கைத்துணைவழி உறவுகளால் எதிர்பாராத ஆதாயம் ஏற்படும்.

**தனுசு**: சகோதரர்கள் வகையில் அலைச்சலுடன் ஆதாயமும் இருக்கும். அவசர முடிவுகளைத் தவிர்க்கவும். பிள்ளைகளின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**மகரம்**: எதிலும் அவசரமில்லாமல் செயல்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்**: எதிலும் அவசரமில்லாமல் செயல்படவேண்டிய நாள். உறவினர்களுடன் வீண் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**மீனம்**: வீட்டில் கலகலப்பான சூழ்நிலை ஏற்படும். புதிய முயற்சிகள் சாதகமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

# ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தல்
# புடினின் கட்சி அமோகவெற்றி!

## ஜனாதிபதித் தேர்தலுக்கான எழுச்சியா?

**மொஸ்கோ, செப். 23**

**ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் புடினின், ஐக்கிய ரஷ்யக் கட்சி வெற்றி பெற்று அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆட்சியமைப்பதை உறுதிப்படுத்தியுள்ளது. இந்த வெற்றி 2024ஆம் ஆண்டு இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் புடின் மீண்டும் வெற்றிபெறுவதற்கான சமிக்ஞைளை வெளிப்படுத்துகின்றது என்று அவதானிகள் குறிப்பிடுகின்றனர்.**

ஜனாதிபதியின் பதவிக்காலம் நீடிப்பு உள்ளிட்ட பல திருத்தங்களுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதற்கு இந்தத் தேர்தல் புடினுக்கு மிக முக்கியமானதாக இருந்தது. அதேநேரம் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவால்னிக்கு விஷம் ஏற்றப்பட்டமை, அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டமை, இன்னும் சில எதிர்க்கட்சிகளுக்கு தேர்தலில் போட்டியிடத் தடை விதிக்கப்பட்டமை உள்ளிட்ட காரணங்களுக்காக புடினுக்கு இருந்த எதிர்ப்பலையும் இந்தத் தேர்தல் உலகளவில் மீண்டும் பேசுபொருளாக மாறுவதற்கு வழியேற்படுத்தியிருந்தது.



எதிர்ப்புகள் குவிந்திருந்தாலும் 450 தொகுதிகள் கொண்ட தேர்தலில் புடினின் கட்சி சுமார் 350 தொகுதிகளுக்கும் மேலாக வெற்றி பெற்றுள்ளது. ஐக்கிய ரஷ்யக் கட்சியின் வெற்றி உறுதிப்படுத்தப்பட்டாலும் மறுமுனையில் தேர்தலில் முறைகேடுகள் இடம்பெற்றுள்ளன என்று எதிர்க்கட்சிகள் போர்க்கொடி தூக்கியுள்ளன. (ம)

## 2,000 ஆண்டுகள் பழமையான
# தங்கப் புதையலை தேடும் தலிபான்கள்

காபூல், செப். 23

சுமார் 2 ஆயிரம் ஆண்டுகள் பழைமையான தங்கப் புதையல் தொகுப்பை தலிபான்கள் தேடிவருகின்றனர்.

கடந்த 1978ஆம் ஆண்டில் கிரேக்க, ரஷ்ய வம்சாவளியை சேர்ந்த அகழ்வாராய்ச்சியாளர் விக்டர் சரியானிடி தலைமையில் ஆப்கானிஸ்தானின் டில்யாமலைப் பகுதியில் அகழ்வாராய்ச்சி நடத்தப்பட்டது. அப்போது 6 கல்லறைகளில் இருந்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தங்க நகைகள், தங்கத்திலான பொருள்கள், தங்க நாணயங்கள் கண்டெடுக்கப்பட்டன. இவை கிரேக்க பாத்திரியா மற்றும் குசான பேரரசுகளின் ஆட்சிக் காலத்தை சேர்ந்தவை என்பது தெரியவந்தது. இந்த தங்க புதையல் தொகுப்பு, 'பாக்திரியா தங்கம்' என்றழைக்கப்படுகிறது. இது பல ஆயிரம் கோடி டொலர் மதிப்புடையதாகும். அமெரிக்க படைகளின் ஆதரவுடன் ஆப்கானிஸ்தானில் ஆட்சி நடைபெற்றபோது, 'பாக்திரியா தங்கம்' காபூலில் உள்ள தேசிய அருங்காட்சியகத்தில் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. தற்போது அந்தத் தங்கப் புதையல் தொகுப்பை காணவில்லை என்றும் அது தொடர்பில் விசாரணைகள் இடம்பெறுகின்றன என்றும் தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (ம)

# எந்தவொரு நாட்டுக்கும் கட்டுப்பட்டு நடக்கோம்!

*தலிபான்களின் அறிவிப்பு சீனாவுக்குப் பதிலடியா?*

காபூல், செப். 23



எந்தவொரு நாட்டாலும் தலிபான்களைக் கட்டுப்படுத்த முடியாது என்று தலிபான் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாஹித் தெரிவித்தார். கடந்த 20 ஆண்டுகளாக அமெரிக்க, நேட்டோ படைகளுக்கு எதிராகப் போராடிய தலிபான்கள் வசம் தற்போது ஆப்கானிஸ்தான் வந்துவிட்டது. அமெரிக்கா, நேட்டோ படைகள் வெளியேறத் தொடங்கியவுடன் ஆப்கானிஸ்தானை தங்கள் பிடிக்குள் தலிபான்கள் கொண்டுவந்தனர். தற்போது அங்கு 70 பேரை உள்ளடக்கிய இடைக்கால அரசு அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், ஆப்கானிஸ்தானில் அடுத்த 40 ஆண்டுகளுக்கு அமைதியான ஆட்சி நடக்க வேண்டுமாயின் என்ன செய்யவேண்டும் என்று பாகிஸ்தானின் பிரதமர் இம்ரான் கான் ஆலோசனை முன்வைத்தார். இதற்குப் பதில் வழங்குகையிலேயே தலிபான்களை எவராலும் கட்டுப்படுத்த முடியாது என்று அதன் செய்தித் தொடர்பாளர் ஜபிபுல்லா முஜாஹித் தெரிவித்தார். (ம)

# பிலிப்பைன்ஸின் ஜனாதிபதித் தேர்தலில் மனி பக்கியோ போட்டி

மணிலா, செப். 23

பிலிப்பைன்ஸின் ஜனாதிபதித் தேர்தலில் தான் போட்டியிடுவதை உறுதிப்படுத்தியுள்ளார் மனி பக்கியோ. குத்துச்சண்டை உலகில் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற மெவதருடான மோதலை அடுத்து பக்கியோ பிலிப்பைன்ஸிலும் உலக அளவிலும் பெரும் செல்வாக்கைப் பெற்றார்.

தற்போது அதன் தொடர்சியாக அவர் ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்குகின்றார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு குத்துச்சண்டை வீரன். களத்திலும், களத்துக்கு வெளியிலும் போராடும் இயல்பான குணம் எனக்குண்டு.

பிலிப்பைன்ஸ் மக்கள் மாற்றத்தை விரும்புகின்றனர். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவேன். மக்களின் ஆதரவுடன் வெற்றிபெறுவேன் என்றார். (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விளையாட்டுக் கழகத்துக்கு 10 ஆயிரம் ரூபா நிதியுதவி

யாழ்ப்பாணம்,செப். 23

அராலி தெற்கு ஜேம்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கு 10 ஆயிரம் ரூபா நிதி கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கப்பட்டது. அதே பகுதியைச் சேர்ந்த நா.பத்மராசா குடும்பத்தினரால் இந்த நிதி உதவி வழங்கப்பட்ட நிலையில் காங்கேசன்துறை கோல்டன் ஸ்டார் லயன்ஸ் கழகத்தினர் விளையாட்டுக் கழகத்தினரிடம் நிதியை கையளித்தனர். (ஜ-9)

# சிறைக்குச் சென்றேன்

## ஒப்புக்கொண்டார் லொஹான்



**கொழும்பு, செப்.23**

**வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு நான் சென்றது உண்மை. ஆனால் எவரையும் அழைத்துச் செல்லவில்லை என்று இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த 12 ஆம் திகதி நான் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கு சென்றேன். ஆனால் நான் சிறைச்சாலைக்குச் செல்லும் போது பெண் ஒருவரையோ அல்லது நண்பர்களையோ அழைத்துச் செல்லவில்லை.

வெலிக்கடைச் சிறைச்சாலையிலுள்ள தூக்குமேடையை பரிசோதிக்கவே நான் சென்றேன். நான் மதுபோதையிலும் இருக்கவில்லை. நான் சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றேன் என்று கூறப்படும் புஷ்பிக்கா என்ற பெண்ணை எனக்கு யாரென்றே தெரியாது - என்றார். (ஒ-4)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

### அங்கஜன்...

வல்வெட்டித்துறையில் தமிழ்த் தேசியம் அடித்து வீழ்த்தப்பட்டிருக்கிறது" என்று தமிழ்த் தேசிய கட்சியின் பொதுச்செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.கே.சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவர் தெரிவு நேற்றுநிறைவடைந்த பின்னர், இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

வல்வெட்டித்துறை நகர சபைக்கான தலைவர் தெரிவில் தமிழ்த் தேசியத்தைச் சீர்குலைக்கக்கூடிய விடயங்கள் நடைபெற்று, சுயேச்சைக் குழுவின் தலைவர் செல்வேந்திரா தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகையில் வல்வெட்டித்துறை நகரசபையின் உபதலைவராக தெரிவுசெய்யப்பட்டிருந்த ஞானேந்திரன், தனக்கே தவிசாளர் வேட்பாளராவதற்குரிய சந்தர்ப்பம் வழங்கவேண்டும் என்று கோரியிருந்தார்.

எனினும், சாதி, மத, பிரதேச வேறுபாடுகளைக் கடந்து தமிழ்த் தேசியம் நிற்கின்றது என்பதைக் காட்டுவதற்காக, இதுவரை காலமும் ரெலோ இயக்கத்திடமிருந்து பிரிந்துநின்று செயற்பட்ட சதீஷை இணைத்து முதல் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கினோம்.

தங்கதுரை, குட்டிமணி தேசியத் தலைவர் பிரபாகரன் ஆகியோர் பிறந்த மண்ணிலே தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்படக் கூடாது என்ற எண்ணத்தில், இதற்குப் பக்கபலமாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் ஆதரவளித்தன.

ஆனால் விக்னேஸ்வரன் அணியான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணிக்கு ஆதரவளித்துவந்த குறித்த சுயேச்சைக்குழுவான செல்வேந்திராவின் 4 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எப். கட்சியைச் சேர்ந்த ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் ஈபிடிபி என்பனவும் இணைந்து வல்வெட்டித்துறை நகர சபையைக் கைப்பற்றியுள்ளது.

வல்வெட்டித்துறையில் தற்காலிகமாக தமிழ்த் தேசியம் தோற்கடிக்கப்பட்டுள்ளது.

இது துரோகத்துக்குக் கிடைத்த வெற்றி. இந்தத் தோல்வியை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம். இதுபோன்ற எத்தனையோ துரோகங்களை தமிழ்த் தேசியம் கண்டிருக்கிறது. துரோகங்கள் புதிதல்ல. துரோகங்களுக்கு தற்காலிக வெற்றி கிடைக்கும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களில் ஒருவர் துரோகத்துக்கு விலைபோனதால் ஆட்சி வீழ்த்தப்பட்டிருக்கிறது. "நான் உனக்கு பக்கபலமாக நிற்கிறேன்" என்று கரணமடித்த ஞானேந்திரனிடம் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான அங்கஜன், சுமந்திரனின் ஆசீர்வாதத்தோடு வல்வெட்டித்துறையில் தமிழ்த் தேசியம் அடித்து வீழ்த்தப்பட்டிருக்கிறது. எனினும், நாங்கள் இருக்கின்றோம். நாங்கள் வீழ்ந்து கிடக்கப்போவதில்லை என்று உறுதி கூறுகிறேன். -என்று சிவாஜிலிங்கம் மேலும் தெரிவித்தார். (கு-26)

### வல்வெட்டித்துறை...

மையில் ஆரம்பமானது. கடுமையான சுகாதார நடைமுறைகளுடன் இந்தத் தெரிவு நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையின் தலைவராக இருந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர் கோணலிங்கம் கருணானந்தராசா, கொரோனாத் தொற்றால் அண்மையில் உயிரிழந்தார். அதனால் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு புதிய தலைவருக்கான தெரிவு நேற்று நடைபெற்றது.

வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 7 ஆசனங்களைக் கொண்டுள்ளது.

சபையில், சுயேச்சைக் குழு 4 ஆசனங்களையும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் ஈ.பி.டி.பி. என்பன தலா 2 ஆசனங்களையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணியில் போட்டியிட்ட ஈ.பி.ஆர்.எல்.எப். என்பன தலா ஒவ்வோர் ஆசனங்களையும் கொண்டுள்ளன.

கூட்டமைப்பு சார்பில் க.சதீஸ் தவிசாளராக முன்மொழியப்பட்டார். சுயேச்சை சார்பாக ச.செல்வேந்திரா முன்மொழியப்பட்டார்.

இதன்போது செல்வேந்திராவுக்கு ஆதரவாக சுயேச்சைக் குழுவின் 4 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினரும், சிறீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினரும், ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் இருவரும்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் உப தவிசாளரான ரெலோவைச் சேர்ந்த ஞானேந்திரனும் வாக்களித்துள்ளனர்.

சதீஸுக்கு சார்பாக, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 6 வாக்குகளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இரு வாக்குகளுமாக 8 வாக்குகளே கிடைத்தன. அதன்படி ஒரு வாக்கு வித்தியாசத்தில் கூட்டமைப்பு ஆட்சியை இழந்தது.

கடந்தமுறை ஈ.பி.டி.பியின் ஆதரவுடன் கூட்டமைப்பு ஆட்சியைப் பிடித்திருந்தது. இந்தமுறை கூட்டமைப்புக்குள்ளேயே ரெலோ கட்சியின் உறுப்பினர் கரணமடித்தமையால், ஆட்சியை இழந்தது. (கு-26)

### நாகர்கோவில்...

நேற்று நடைபெற்றது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச் செயலருமான எம்.கே. சிவாஜிலிங்கம், ஈகைச் சுடரேற்றி அகவணக்கம், மலர் வணக்கம் செலுத்தி நினைவுகூர்ந்தார்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீது 1995ஆம் ஆண்டு செப்ரெம்பர் 22ஆம் திகதி இலங்கை விமானப்படை மேற்கொண்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் 21 மாணவர்கள் உட்பட 39 பேர் படுகொலை செய்யப்பட்டனர்.

குறித்த தினத்தன்று மதியம் 12.30 அளவில் மாணவர்கள் தமது பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் விளையாடிக் கொண்டிருந்த வேளையில் விமானப்படையின் புக்காரா விமானம் பேரிரைச்சலுடன் வந்துள்ளது.

விமானத்தின் சத்தத்தைக் கேட்ட மாணவர்கள் பயம் காரணமாக அங்குள்ள ஒரு மரத்தின்கீழ் நின்றவேளை மரத்தின்மீது அந்த விமானம் நடத்திய குண்டு வீச்சில் அந்த இடத்திலேயே 21 மாணவர்கள் உடல் சிதறிப் பலியானார்கள். பொது மக்கள் 18 பேரும் இதில் கொல்லப்பட்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (கு-26)

### காணாமல்...

செயற்பாடுகளே அவசியம். இலங்கையர் என்ற ரீதியில் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவம் மீண்டும் ஏற்படாத வகையில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்படுவதே இறுதியான பதிலாகும்.

இவ்வாறு, அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போது அவர் இதனை தெரிவித்தார்.

மோதல் இடம்பெற்ற காலப்பகுதியில் காணாமற்போனவர்களுக்கு விரைவாக மரணச்சான்றிதழ் வழங்கப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்துள்ளார். ஆனால், காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்று காணாமல் போனவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் கேட்கின்றனர். உண்மையிலேயே இவர்களுக்கு என்ன நடந்தது என்று ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளித்த அமைச்சர்,

"காணாமற்போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை என்னால் திட்டவட்டமாகக் கூறமுடியாது. இதனைக் கண்டறிவதற்காக இலங்கையில் அலுவலகம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வெளிநாடுகளிலுள்ள புலம்பெயர் அமைப்புகளுக்கு - நாட்டை நேசிப்பவர்களுக்கு பகிரங்க அழைப்பொன்றை விடுத்தார். அதாவது, நாம் ஒன்றிணைந்து இதுகுறித்து பேச்சு நடத்துவோம். தீர்மானங்களை மேற்கொள்வோம். இவர்கள் எமது நாட்டு பிரஜைகள் என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொலைநோக்குடனான சாதகமான நிலைப்பாடாகும்.

வடக்கை பிரதிநிதித்துவம் செய்யும் எமது சகோதர உறுப்பினர்கள் இது குறித்து சாதகமாக கருத்துத் தெரிவித்தனர். திட்டவட்டமாக உதாரணத்துக்கு எக்ஸ் என்ற நபர் காணாமற்போனார் என்று வைத்துக்கொள்வோம். இவருக்கு என்ன நடந்தது என்ற கேள்விக்கு பதிலளிக்கக்கூடிய அளவுக்கு எமக்கு தெளிவில்லை. இதனை எந்தவகையிலும் மறைக்கக்கூடிய விடயமல்ல.

எந்தச் சந்தர்ப்பத்திலாவது சரியான தகவல் வெளிப்படலாம். நாம் அதனை அறிந்துகொள்ள முடியும். சில சந்தர்ப்பங்களில் காணாமற்போனவர்கள் சிலர் வெளிநாடுகளில் அரசியல் புகலிடம் பெற்று வாழ்கின்றனர். இது அனைத்து சந்தர்ப்பங்களிலும் அல்ல.

தமது பிள்ளைகள் காணமற்போயுள்ளனர் என்று பெற்றோர் கண்ணீர்விடும் காட்சியை ஒவ்வொரு வருடமும் நாம் காண்கின்றோம். இவர்கள் அனைவரும் இலங்கைப் பிரஜைகள். அதனால், நாம் இதுதொடர்பில் பொறுப்புடன் செயற்பட வேண்டியுள்ளது.

அதனால் அதில் எதனையும் மறைப்பதற்கில்லை. இதுதொடர்பில் ஒன்றிணைந்த செயற்பாடுகளே அவசியம். இலங்கையர் என்ற ரீதியில் இவ்வாறான துர்ப்பாக்கிய சம்பவம் மீண்டும் ஏற்படாத வகையில் செயற்படுவதே இறுதியான பதிலாகும்" என்றார். (கு-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் 21 தாக்குதல்: விசாரணை துரிதம்

கொழும்பு, செப்.23
உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன என்று பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
இந்தத் தாக்குதல் தொடர்பில் இதுவரை 9 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. 25 பேருக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.
இது தொடர்பான விசாரணை தாமதிக்கப்படுகின்றது என்று பல்வேறு தரப்பினர் கூறும் குற்றச்சாட்டுகளை ஏற்றுக் கொள்ள முடியாது.
விசாரணைகளை நடத்துவதற்காக மூவரடங்கிய நீதிபதிகள் குழு நியமிக்கப்பட்டுள்ளது. தாக்குதல் தொடர்பாக 23 ஆயிரத்து 700 குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
இலங்கை மற்றும் உலகின் பல்வேறு நாடுகளில் அண்மையில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளுடன் ஒப்பிடுகையில், தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்ததில் இருந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விசாரணைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன - என்றார். (ஒ-4)

# அகமுரண்பாடுகளைத் தவிர்த்து தமிழ்த் தலைமைகள் ஒன்றுபட வேண்டும்

## கிழக்கு தமிழர் ஒன்றியம் வலியுறுத்து



**அம்பாறை, செப்.23**
**'அகமுரண்பாடுகளைத் தவிர்த்து தமிழ் அரசியல் தலைமைகள் ஒன்றுபட வேண்டும். எமது மக்களின் உரிமைகள், பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பில் ஒரு மித்த குரலே பயனளிக்கும்.' இவ்வாறு கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் பொதுச் செயலாளர் வீ.குணாளன் தெரிவித்துள்ளார்.**

கிழக்கு தமிழர் ஒன்றியத்தின் ஊடகவியலாளர் சந்திப்பொன்று, கல்முனை ஊடக மையத்தில் அண்மையில் நடைபெற்றது.
இதன்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது;
'எமது கிழக்கு தமிழர் ஒன்றியம் தமிழ் அரசியல் கட்சிகளையும், தமிழ் அரசியல் தலைமைகளையும் ஒரே மேடையில் சேர்த்து எமது உரிமைகளை வென்றெடுப்பதற்கான பகீரத முயற்சிகளையும் முன்னெடுத்து வந்தது.
கிழக்கு மாகாணத்துக்கான தலைமைத்துவம் ஒன்றை உருவாக்கவும் பாடுபட்டோம். ஆனால் கடந்த பொதுத்தேர்தலுடன் எமது முயற்சிகள் கைகூடாமல் போனாலும் இதற்கான எமது முயற்சி இன்னும் தொடருமென்று உறுதியுடனிருக்கின்றோம்.
பேரினவாத அரசியலின் உள்நுழைவே தமிழ் - முஸ்லிம் மக்களிடையே பிளவுகளை ஏற்படுத்தி வருகின்ற போதிலும் தமிழ், முஸ்லிம் சமூகங்கள் இங்கு இணைந்தே வாழ வேண்டுமென்ற யதார்த்தத்தை உணர்ந்து நாம் செயற்பட வேண்டும்.
மேலும் அண்மைய அனுராதபுரம் சிறைச்சாலை சம்பவம் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.
இதனால் தமிழ் அரசியல் கைதிகள் மன உளைச்சலுக்கும், அச்சத்துக்கும் ஆட்படும் நிலைமையுள்ளது. இவர்களை பாதுகாப்பான, அவர்களது அடிப்படை உரிமைகளை உறுதிப்படுத்தும் வேறு சிறைச்சாலைகளுக்கு மாற்றவும் ஆவன செய்யப்பட வேண்டும்.
இதேவேளை தமிழ் அரசியல் கைதிகள் அனைவரையும் பொது மன்னிப்பின் கீழ் விடுதலை செய்ய வேண்டும் - என்றார். (ஐ-30)

# கத்தோலிக்கர்களை ஒடுக்க அரசு முயற்சி

## சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, செப்.23
கத்தோலிக்கர்களை ஒடுக்கும் முயற்சியில் தற்போதைய அரசு ஈடுபட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினரான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவிக்கையில்,
2019 ஆம் ஆண்டு ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்பில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கேட்டு குரல் கொடுக்கும் கத்தோலிக்கர்களை ஒடுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டு வருகின்றது. தனது அரசியல் நிகழ்ச்சி நிரலை அடையவே இந்தத் திட்டம்.
கத்தோலிக்க சமூகத்தினர் இடையே பொய்யான தகவல்களை அரசு பரப்புகின்றது.
ஈஸ்டர் தாக்குதல்களின் ஆதாரங்களைக் கொண்ட 23 தொகுதிகளில் ஒன்றை மாத்திரமே அரசு வெளிப்படுத்தியுள்ளது.
எனவே ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான விசாரணைகள் தொடர்பான 22 தொகுதிகளில் உள்ள விவரங்களை வெளிப்படுத்த வேண்டும். அதற்குப் பதிலாக, பொது மக்களைத் தவறாக வழிநடத்தும் முயற்சியிலும், சேறுபூசும் பிரசாரத்தில் அரசு ஈடுபடுகின்றது - என்றார். (ஒ-4-ரி2)



# சேவை நயப்பு நிகழ்வு

மயிலிட்டி, செப்.23
வலி. வடக்கு பிரதேச சபையின் மயிலிட்டி உப அலுவலகத்தில் பொறுப்பதிகாரியாக இருந்து ஓய்வு பெறும் திருமதி ஜெயபாலன் சர்வலிங்கேஸ்வரிக்கான சேவை நயப்பு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.
வடக்கு மாகாண உள்ளூராட்சி சேவையில் 37 வருடங்கள் முகாமைத்துவ சேவை அதிகாரியாக இவர் கடமையாற்றி தற்போது ஓய்வு பெற்றுள்ளார். (ஐ-50)

# லொஹான் விவகாரம்: விசாரணை ஆரம்பம்



கொழும்பு, செப்.23
அநுராதபுரம் மற்றும் வெலிக்கடை சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.
இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த தொடர்பான சம்பவம் நடக்கவில்லை என்று நான் ஒரு போதும் கூறவில்லை. சிறைச்சாலையில் எந்தச் சம்பவமும் நடக்கவில்லை என்றும் நான் கூறவில்லை. ஊடகங்களில் வெளியாகியுள்ள பிரசாரம் முற்றிலும் உண்மைக்குப் புறம்பானது.
சிறைச்சாலைகளில் இடம்பெற்ற சம்பவங்கள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளோம். குறித்த சம்பவங்களை விசாரிக்க ஏற்கனவே சிறைச்சாலைகள் திணைக்களம் ஆணையாளரை நியமித்துள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ,4)

# சர்வதேசத்தை பகைத்தால் இலங்கை பாதாளத்துக்குள்!

## ரெலோவின் ஊடகப்பேச்சாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.23
அரசியல் தீர்வு, மனித உரிமை, நீதிப் பொறிமுறை, நல்லிணக்கம், மற்றும் பொறுப்புக் கூறல் விடயங்களில், சர்வதேச சமூகத்தோடு ஒத்திசைந்து செயற்படத் தவறினால், இலங்கை அதல பாதாளத்துக்குள் தள்ளப்படும் என்று ரெலோவின் ஊடகப்பேச்சாளர் சுரேந்திரன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கையில்,
ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொண்டிருக்கும் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சில வேடிக்கையான கருத்துக்களை நகைச்சுவையாகக் கூறியிருக்கின்றார்.
புலம்பெயர் தமிழ்ச் சமூகம் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும் என்று அவர் கூறியிருப்பது, வீட்டுக் கதவை இறுக்கிப் பூட்டி வைத்துவிட்டு விருந்தாளிகளை உணவருந்த உள்ளிருந்து அழைப்பது போன்ற ஒரு செயற்பாடு தான்.
புலம்பெயர் முதலீட்டாளர்கள் ஒரு நாட்டை நோக்கி வருவதற்கான அரசியல் மற்றும் நிர்வாகச் சூழல் மிக அவசியம் என்பதை ஜனாதிபதி உணர்ந்து கொள்ளத் தவறி இருக்கின்றார்.
அரச நிர்வாகத்தில் இராணுவமயமாக்கல் தொடர்கின்றது.
அரசியல் பிரச்சினைகள், மனித உரிமை விடயங்கள் அரசால் தீர்வு காணப்படாமல் தொடர்கின்றது. உள்ளகப் பொறிமுறை ஊடாக நியாயமான தீர்வுகள் எந்த இனத்தவருக்கும் கிட்டாது என்று முழு நாடுமே உணர்ந்துள்ளது.
எல்லாவற்றுக்கும் மகுடம் வைத்தால் போல அரசியல்கைதிகள், இராஜாங்க அமைச்சரால் துப்பாக்கி முனையில் மிரட்டப்பட்டுள்ளனர். அதற்கான சட்ட நடவடிக்கை எடுக்க, நீதி வழங்க உள்ளகப் பொறிமுறை தவறியுள்ளது மாத்திரமல்ல அவரைப் பாதுகாக்கும் போக்கை எடுத்துக் காட்டியுள்ளது - என்றார். (ஒ-4)

# லொஹான் விவகாரத்தால் அதிகாரிகளுக்கு அழுத்தம்

கொழும்பு, செப்.23
இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த விவகாரம் தொடர்பில், சிறைச்சாலை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டு வருகின்றது என்று எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது
அநுராதபுரம் சிறைச்சாலையில் தமிழ் அரசியல் கைதிகளை அச்சுறுத்தியமை தொடர்பான சம்பவத்தை மறைப்பதற்காக, அதிகாரிகளுக்கு சிலர் அழுத்தம் பிரயோகிக்கின்றனர்.
எனவே இந்தச் சம்பவம் தொடர்பில் சிறை அதிகாரிகள் அளித்த ஆதாரங்களை தீவிரமாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்த ஜயவர்தன தெரிவித்துள்ளார். (ஒ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரிழப்பைத் தடுக்க தடுப்பூசியே ஒரே தீர்வு

## விசேட மருத்துவர் ஆலோசனை

கொழும்பு,செப்.23

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களில் பெரும்பாலானவர்கள் எந்தவொரு கொரோனாத் தடுப்பூசியையும் பெற்றிருக்கவில்லை. எனவே தொற்றால் ஏற்படும் உயிரிழப்புக்களைத் தடுக்க அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வது அவசியம் என்று சிறிஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஜீவ வாயு சக்தி விஞ்ஞானப் பிரிவின் பேராசிரியர் நிலீகா மலவிகே தெரிவித்துள்ளார். அதேவேளை கொழும்பு தேசிய மருத்துவமனையில் கடந்த மாதம் கொரோனாத் தொற்றால் உயிரிழந்த 239 பேரில், 220 பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக் கொள்ளாதவர்கள் என்று ஐ. டி. எச். மருத்துவமனையின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டி யுள்ளார்.




கொரோனா வைரஸ் பரவல் தொடர்பில் மக்களுக்கு அறிவுறுத்தும் மற்றுமொரு வேலைத்திட்டமாக, அனைத்து தொலைக்காட்சிகளிலும் நேரடி ஒளிபரப்புச் சேவை முன்னெடுக்கப்பட்டுள்ளது. வைரஸ் ஒழிக்கப்பட்டு வசந்தம் வருகின்றது எனும் தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த வேலைத்திட்டத்தில் தடுப்பூசி பெற்றுக் கொள்வதின் முக்கியத்துவம் தொடர்பில் கருத்துக்கள் பரிமாறப்பட்டு வருகின்றன. (ஒ-4-ரி2)

---

## ஈராண்டு சென்றதுவோ எங்கள் தாயே!

அன்னை மடியில்
11 . 01 . 1948



ஆண்டவன் அடியில்
23 . 09 . 2019

### அமரர் திருமதி பரமேஸ்வரி பரராஜசிங்கம்

**(திதி: புரட்டாதி அபரபக்க தசமி - 01.10.2021)**

என்னதவம் செய்தனம்யாம் என்று எண்ண
எம்குடும்ப நாயகியாய் எம்முள் ஒன்றி
அன்ன புகழ் அத்தனையும் அறத்தால் ஈந்து
அவ்வழியே இல்லறநல் மாண்பைக் காத்து
முன்னமவன் திருத்தாளில் முழுதாய் சேர்ந்து
மூவெட்டு மாதமின்று போனதுவோ நீயும்
சொன்ன மொழி ஆசியெமை வாழ்த்தும் அம்மா
சொக்கனவன் திருத்தாளில் இனிது வாழ்வாய்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**கலைக்கோயில்,**
**சின்னத்தாய், புலோலி தெற்கு.**

**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

### செல்வி சின்னத்துரை இலக்குமிதேவி

(ஓய்வுநிலை குடும்பநல உத்தியோகத்தர்)



மாலிசந்தி, முத்தர் வளவு, அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி. சின்னத்துரை இலக்குமிதேவி 22.09.2021 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-பாக்கியம் தம்பதியரின் அன்பு மகளும், சரஸ்வதி, அன்னம்மா, இராசரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற சபாரத்தினம் காலஞ்சென்ற நடராஜா, மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பன் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**முத்தர்வளவு, மாலிசந்தி,**
**அல்வாய் கிழக்கு, அல்வாய்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## மரண அறிவித்தல்

தோற்றம்
28 . 12 . 1948



மறைவு
18 . 09 . 2021

### கலாநிதி செல்வத்துரை குருபாதம்

(புலம் பெயர் எழுத்தாளர் முன்னாள் உதவி ஆசிரியர் ஈழநாடு)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், அராலி தெற்கு, கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கலாநிதி செல்வத்துரை குருபாதம் (புலம்பெயர் எழுத்தாளர் முன்னாள் உதவி ஆசிரியர் ஈழநாடு) அவர்கள் கடந்த (18.09.2021) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.முத்து செல்வத்துரை (மலேசியா Rail Way திணைக்கள அத்தியட்சகர்) மற்றும் அராலி தெற்கைச் சேர்ந்த கனடாவில் வசித்த திருமதி செல்வத்துரை பொற்கொடி அவர்களின் பாசமிகு மகனும், கொக்குவிலைச் சேர்ந்த கனடாவில் வசிக்கும் ஆசிரியை ஜெயஜோதியின் அன்புக் கணவரும், சிவானந்தன் (கனடா), பரஞ்சோதி (கனடா), சேதுபதி (கனடா), ஜெயசோதி (கொழும்பு), செல்வசோதி (கனடா), கமலாசனி (அராலி தெற்கு) ஆகியோரின் அன்பு சகோதரனும், இராஜகுலேந்திரனின் (அராலி தெற்கு - ஓய்வுபெற்ற விவசாய போதனாசிரியர்) அன்பு மைத்துனரும் மற்றும் ஜீவகன் (வடலியடைப்பு), ரட்சகன் (ஜேர்மனி), சுபாசகன் (பின்லாந்து), சங்கீதா (வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**077 616 4191, 077 490 9825**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

---

## மரண அறிவித்தல்

பிறப்பு
27 . 08 . 1944



இறப்பு
22 . 09 . 2021

### சண்முகம் அன்னலிங்கம்

தாவடியை பிறப்பிடமாகவும் ஏழாலையை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் அன்னலிங்கம் அவர்கள் நேற்று (22.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் சண்முகம் பூரணம் தம்பதியரின் கனிஸ்ட புத்திரனும் தங்கேஸ்வரியின் அன்புக் கணவரும், அமரர் இராசையா பரிமளம் தம்பதியரின் அன்பு மருமகனும், இராசலிங்கம் (அமரர்), சரஸ்வதி, நடேசலிங்கம் (அமரர்), இராசேஸ்வரி, யோகேஸ்வரி (அமரர்), கமலேஸ்வரி ஆகியோரின் அன்பு சகோதரனும், சுதேசன், சுகிர்தா, சுஜீவா மற்றும் றமேஸ் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஸ்ரீரஞ்சினி, ரவீந்திரன், சுதர்சன் மற்றும் சுகித்தா ஆகியோரின் அன்பு மாமனும், கவியரசி, யருஷா, சர்யுதன், விவின், மிலக்ஷன், தனுஜன், ருசான் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் நடைபெற்று, பூதவுடல் ஏழாலை உசத்தியோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் [illegible]

**[illegible]**

**தகவல்:**
**சுதேசன் (மகன்)**

---

## மரண அறிவித்தல்

### திருமதி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி



**பிறப்பு** **24.03.1931** — **இறப்பு** **22.09.2021**

கந்தரோடையை பிறப்பிடமாகவும், அரசடி வீதி, கந்தர்மடம், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுந்தரம்பிள்ளை மகேஸ்வரி நேற்று (22.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கம்மா இளையதம்பி தம்பதியரின் மகளும், அமரர் பென்னுத்துரை சுந்தரம்பிள்ளையின் அன்பு மனைவியும், விக்னேஸ்வரி, சுந்தரேஸ்வரி, உருத்திரகுமார் ஆகியோரின் பாசமிகு தாயாரும், இராஜேஸ்வரன், குமாரகுலசிங்கம், அகிலாண்டேஸ்வரி ஆகியோரின் மாமியாரும், சிந்துஜன், சுகஸ்திகா, சுகன்யா ஆகியோரின் அப்பம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் [illegible]கிரியைக்காக [illegible] இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை [illegible] உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

தோற்றம் 23 . 05 . 1944



மறைவு 21 . 09 . 2021

### கந்தையா சிறீதரன்

கொக்குவில் கிழக்கை பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா சிறீதரன் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா இராசமணி தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை புவனேஸ்வரி (ராசு) தம்பதிகளின் மருமகனும், சரஸ்வதிதேவி (தேவி) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நடேசன் மற்றும் மகேந்திரன், ஶ்ரீமதி, புஸ்பராணி (ரதி) காலஞ்சென்ற மனோகரன் மற்றும் சிறீகாந்தன், ஜீவகாந்தன், பாஸ்கரன், தயாபரன், ரேணுகா ஆகியோரின் சகோதரனும், வடிவாம்பிகை, கலா, சற்குணம், காலஞ்சென்ற பத்மநாதன் மற்றும் வசந்தி, றஜிதா, கிருபாலினி, ஶ்ரீநிவாசன், தவரத்தினம் (ராணி), தங்கராஜா, புவனேந்திரன், நடராஜா ஆகியோரின் மைத்துனரும், சுதன், தீபன், அனோஜன், வினோஜன் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக இன்று (23.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயனத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
குடும்பத்தினர் (021 790 1541)

## 31ஆம் நாள் நினைவும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 . 04 . 1952



மறைவு 24 . 08 . 2021

கடந்த 24.08.2021 அன்று இறைபதம் அடைந்த எங்கள் குடும்ப தலைவர்

### அமரர் சுப்பையா மகாதேவன்


*அப்பா!*
*கண்களை கண்ணீர் மறைக்க*
*கூப்பிட்ட குரல்களும் ஓய்ந்து போக*
*விடைகொடுத்து இன்றுடன் மாதமொன்று....*
*அல்லும் பகலும் அயராது உழைத்து*
*கண்ணினை இமைகாப்பது போல்*
*எமையெல்லாம் காத்தீரே - அப்பா*
*எமக்கொரு துன்பம் வரும் கனமெல்லாம்*
*எம்முடனிருந்து எமை தளரவிடாமல் வைத்தவரே*
*காலம் தானிருக்க எம்மை கண்ணீரில்*
*ஆழ்த்திவிட்டு விண்ணோடு சென்றீர்கள்*
*வேதனையில் வாடுகின்றோம் - அப்பா!*

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும் நேரடியாகவும் தொலைபேசியூடாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும் உற்றார், உறவினர், நண்பர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் அனைத்து வழிகளிலும் உதவிய அன்பு உள்ளங்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மஞ்சத்தடி,
இணுவில் கிழக்கு

குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



### அமரர் முத்தையா பாஸ்கரன்

பிறப்பு 04.07.1963

இறப்பு 21.09.2021

இணுவில் மஞ்சத்தடி வீதியைப் பிறப்பிடமாகவும் சுவிஸ் லுசனை வதிவிடமாகவும் கொண்ட முத்தையா பாஸ்கரன் கடந்த (21.09.2021) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா பாக்கியம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னு பொன்னம்மா தம்பதியினரின் மருமகனும், சிவயோகம் அவர்களின் அன்புக் கணவரும் நிருசன், சிந்துஜன், பிரஷான் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சந்தியா அவர்களின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.09.2021) வெள்ளிக்கிழமை முற்பகல் 11.30 தொடக்கம் பிற்பகல் 3.30 வரையில் Friedental strasse 60, 6004 Luzern, Switzerland இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.


தகவல்
குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு
+ 41764010399,+ 94775015141

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மண்ணில் 26 . 11 . 1936

விண்ணில் 24 . 08 . 2021



## அமரர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

அன்னார் அரசடி வீதி திருநெல்வேலி கிழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை இரத்தினம் தம்பதியரின் முத்தாக தத்தெடுத்த அன்பு மகனும், நாகம்மா அவர்களின் பாசமிகு கணவரும், இராஜேஸ்வரி- வல்லிபுர நாதன், புவனேஸ்வரி - கணபதிப்பிள்ளை யோகேஸ்வரி-கதிர்காமநாதன், யோகேந்திரன்-மல்லிகாதேவி, இராஜேந்திரன்-சங்கரி, புவனேந்திரன்-சுமதி, விமலேஸ்வரி-பிறேமராஜன், அகிலேஸ்வரி-கனகராசா, விமலேந்திரன்-காஞ்சனா ஆகியோரின் உடன்பிறவா சகோதரனும், சிறிதரன் (கனடா), மகேந்திரராசா, தெய்வேந்திரம் (கனடா), கலைச்செல்வன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், மங்களேஸ்வரி (கனடா), இந்திராணி, கேதீஸ்வரி (கனடா), ரமணி (கனடா) ஆகியோரின் மாமனாரும், லங்கதீபன், மகிழ்ந்தினி-ரஜித்சீலன், நிர்த்திகன், நிலக்ஷன் (யதுசன்), நிருசன், சரணியா, தேனுகா, துர்க்கா சரண்யா, ஹங்கனி ஆகியோரின் பேரனும், கெவின் அவர்களின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.08.2021 செய்வாய்க்கிழமை கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெற்றது.

அன்னாரின் துக்கத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் 21.09.2021 அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் இடம்பெற்றது. வீட்டுக்கிரியை இன்று (23.09.2021) வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

51/1, அரசடி வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

குடும்பத்தினர்.

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 25 . 11 . 1945

உதிர்வு 24 . 08 . 2021



கடந்த 24.08.2021 செவ்வாய்க்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர்

## அமரர் வல்லிபுரம் கந்தசாமி

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 22.09.2021 புதன்கிழமை நடைபெற்று, இன்று (23.09.2021) வியாழக்கிழமை வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

அன்னாரின் மறைவுச் செய்திகேட்டு எமது இல்லத்திற்கு வருகை தந்தவர்களுக்கும் தொலைபேசி மூலம் ஆறுதல் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் பல வழிகளில் உதவி செய்தவர்களுக்கும், குடும்பத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்வதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலை காரணமாக உங்கள் அனைவரையும் அழைக்க முடியாமைக்கு மனம் வருந்துகின்றோம்.

குடும்பத்தினர்
077 555 9612

'வைகை'
வெள்ளாம்போக்கட்டி, கொடிகாமம்.

# மரண அறிவித்தல்

தோற்றம் 18 . 06 . 1967

மறைவு 22 . 09 . 2021



## ஆலாலசுந்தரம் முருகானந்தன்

(ஆசிரியர், யா/ பரியோவான் கல்லூரி)

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆலாலசுந்தரம் முருகானந்தன் நேற்று (22.09.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆலாலசுந்தரம் திரவியம் தம்பதியினரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பித்துரை சரஸ்வதி தம்பதியினரின் பாசமிகு மருமகனும், மோகனலக்சுமியின் (ஆசிரியை, சென் ஜேம்ஸ் ம.வி) பாசமிகு கணவரும், கஸ்தூரியின் (மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான தவமணிதேவி, பாலச்சந்திரன் மற்றும் செல்வராணி, நடேசானந்தன், காலஞ்சென்றவர்களான விவேகானந்தன், புஸ்பராணி மற்றும் இந்திராணி, சரஸ்வதிதேவி, சுபத்திராதேவி, கணேசானந்தன், உருத்திரானந்தன், குமுதினி, பத்மினி ஆகியோரின் சகோதரனும், விக்கினேஸ்வரி, கருநானந்தன், சரஸ்வதி, பாலதேவி, காலஞ்சென்றவர்களான புவனேஸ்வரன், பத்மநாதன், கந்தசாமி மற்றும் தேவகி, சிவகலா, தவச்செல்வம், சயந்தன், கணேசமூர்த்தி, தனபாலசிங்கம், மகாலட்சுமி, விஜயலட்சுமி, லிங்கராஜா, கணேசலிங்கம், சோதிலட்சுமி, ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.09.2021) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 766 6684

தகவல் :
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

பிறப்பு 07 . 05 . 1933

இறப்பு 22 . 09 . 2021



## அமரர் யசோதராதேவி தியாகராஜா

இளைப்பாறிய அதிபர் (மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி).

நல்லூரரைப் பிறப்பிடமாகவும், சிட்னி (அவுஸ்திரேலியா)யை வதிப்பிடமாகக் கொண்ட திருமதி. யசோதரா தியாகராஜா நேற்று (22.09.2021) புதன்கிழமை சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி நவரட்ணராஜாவின் புதல்வியும், காலஞ்சென்ற திரு.திருமதி.றாயோசாகிப் M.சின்னத்தம்பியின் மருகளும், காலஞ்சென்ற சி.தியாகராஜா (முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாள்ர், முன்னாள் உடற்கல்விப் பணிப்பாளர், யாழ் பல்கலைக்கழகம்) அவர்களின் அன்பு மனைவியும், ராகுலனின் (அவுஸ்திரேலியா) பாசமிகு தாயாரும், மாலினியின் அன்பு மாமியாரும், சுபத்திரா சிவநாயகம், காலஞ்சென்றவர்களான உருத்திரா நவரட்ணராஜா, சிவகுமாரன் நவரட்ணராஜா மற்றும் கௌசல்யா தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற ராதா ராஜரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்ற சிவநாயகம், காலஞ்சென்ற சகுந்தலா, அகிலாண்டநாயகி, காலஞ்சென்ற தட்சணாமூர்த்தி, காலஞ்சென்ற ராஜரட்ணம் ஆகியோரின் அன்பு மைத்துனியும், நிஷா, ஷயன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்களுக்கு அறியத் தருகின்றோம். கொரோனா தொற்று சார்ந்த கட்டுப்பாட்டின் காரணமாக நேரில் அஞ்சலி செலுத்துவது இயலாதென்பதையும் கனத்த இதயத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல் : மகன் - ராகுலன் (+61 417 555 238)
மருமகள் - மாலினி (+61 434 065 062)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உறவுகளுக்கு ...

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை (திருத்தச்)சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சரணடைந்தவர்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்படவேண்டுமென ஐ.நா. சாசனம் உள்ள நிலையில், ஐ.நா.வுக்கு சென்றுள்ள ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச ஐ.நா. செயலரிடமே இலங்கையில் காணாமல் போனவர்களுக்கு மரணச் சான்றிதழ் கொடுக்கப் போகின்றேன் என்று கூறுகின்றார். அவ்வாறானால், இலங்கையில் கண்கண்ட சாட்சியங்களுடன் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டவர்கள், சரணடைந்தவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டு விட்டனர் என்றே ஜனாதிபதி கூறுகின்றார். காணாமலாக்கப்பட்டவர்களுக்கு ஜனாதிபதி மரணச் சான்றிதழ் கொடுப்பதனால் அதற்குக் காரணமானவர்களுக்கு தண்டனையும் கொடுக்க வேண்டுமென இந்தச் சபையில் கோருகின்றேன்.

இலங்கை இராணுவத்திடம் கண்கண்ட சாட்சியங்களுடன் ஒப்படைக்கப்பட்ட எமது உறவுகளுக்கு மரணச் சான்றிதழ் கொடுப்பேன் என இந்த நாட்டின் ஜனாதிபதி ஐ.நா.வுக்கு போய்க் கூறுகின்றார் என்றால், தமிழ் மக்களின் உயிர்களை அவர் எவ்வளவு தூரம் மலினமாக, துச்சமாகப் பார்க்கின்றார் என்பதனைப் புரிந்துகொள்ள முடியும்" என்றார். (த-22)

## கொரோனாச் ...

செல்லப்படவிருந்த நிலையில், பெட்டி உடைக்கப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமையும் இது போன்றதொரு சம்பவம் இடம்பெற்றிருந்தநிலையில், சுகாதார நடைமுறைகள் விடயத்தில் நிர்வாகக் கட்டமைப்பின் தொய்வுநிலையால் இந்தநிலை ஏற்படுகின்றதா? என்று பலரும் கேள்வி எழுப்புகின்றனர்.

கொரோனாச் சடலம் வைக்கப்பட்ட பெட்டி உடைக்கப்பட்ட சம்பவம், கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் நேற்று இடம்பெற்றது. அங்கிருந்து வவுனியாவுக்கு குறித்த சடலம் எடுத்துச் செல்லப்படவிருந்தநிலையிலேயே தொற்றால் உயிரிழந்தவரின் உறவினர் ஒருவர் குறித்த பெட்டியை உடைத்துள்ளார் என்று குற்றம்சாட்டப்படுகின்றது.

அதனால், சிறிது நேர தாமதத்தின் பின்னரே சடலத்தை எடுத்துச்செல்ல வேண்டிய நிலைமை ஏற்பட்டது. பெட்டி உடைத்த நபர் அங்கிருந்து தப்பியோடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கடந்த ஞாயிற்றுக்கிழமை கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவரின் சடலம் இறுதி அஞ்சலிக்காக உதயநகரில் அமைந்துள்ள அவரது வீட்டுக்கு எடுத்து செல்லப்பட்ட சம்பவமும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

அவ்வாறு முறைகேடாக நடந்துகொள்வதற்கு வடக்கிலுள்ள மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளரே பக்கபலமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, நிர்வாகக்கட்டமைப்பிலுள்ள தொய்வுநிலையால் இத்தகைய சம்பவங்கள் இடம்பெறுகின்றனவா என்று புத்திஜீவிகள் கேள்வியெழுப்புகின்றனர்.

இதுபோன்ற சம்பவங்கள் இடம்பெறுவதைத் தவிர்க்கவேண்டும், தடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது. (த-6)

## யாழ்.பல்கலைக்கழக ...

பட்டமளிப்பு விழாத் தொடர்பில் தீர்மானங்களை இயற்றுவதற்காக நேற்று நண்பகல் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்குழுவின் விசேட கூட்டத்தின் முடிவில் ஊடகங்களுக்கு விவரிக்கும்போதே கலாநிதி கே. சுதாகர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது பல்கலைக்கழப் பதிவாளர் வி. காண்டீபன், மாணவர் நலச் சேவைகள் பணிப்பாளர் கலாநிதி சி.ராஜ் உமேஸ் மற்றும் மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாவது பகுதி, எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம், 08 ஆம், 09 ஆந் திகதிகளில், பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது என்றும், நாட்டில் இப்போதுள்ள கொரோனா - தனிமைப்படுத்தல் ஊரடங்கு நிலைமைகள் நீடிக்குமாயின் அதனை ஒக்ரோபர் 07 ஆம் திகதி நிகழ்நிலையில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்றும், கடந்தவாரம் யாழ். பல்கலைக்கழகத்தால் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், பட்டமளிப்பு விழாவை நேரடியாக நடத்துவதற்குச் சுகாதார சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அனுமதி வழங்கவில்லை. இதனால் பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடத்தி மாணவர்களுக்கான பட்டங்களை உறுதிப்படுத்தப்படுத்துவதற்குப் பல்கலைக்கழக நிர்வாகம் முடிவு செய்திருந்தது.

நிகழ்நிலைப் பட்டமளிப்புக்குத் தாங்கள் இணங்கவில்லை என்று பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் துணைவேந்தரின் கவனத்துக்குக் கொண்டுவந்திருந்தனர். இதனையடுத்து துணைவேந்தரின் வேண்டுகோளுக்கமைய மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகளையும் உள்வாங்கி, பட்டமளிப்பு விழாக் குழுவின் விசேட கூட்டம் கூட்டப்பட்டிருந்தது.

கூட்டத்தின் முடிவில், எதிர்வரும் ஒக்ரோபர் 07 ஆம் திகதி பட்டமளிப்பு விழாவை நிகழ்நிலையில் நடாத்தி பட்டங்களை உறுதி செய்வதென்றும், தற்போதைய நிலைமைகள் சீரடைந்ததும் மரபு ரீதியான பட்டமளிப்பு வைபவத்தை மிகக் குறுகிய காலத்தினுள் நடத்துவதற்கான திகதியை முன்மொழிவதற்கென மாணவர் பிரதிநிதிகளையும், பல்கலைக்கழக அலுவலர்களையும் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

குழுவினால் முன்மொழியப்படும் திகதிகளில் பட்டமளிப்பு விழாவை நடத்துவதற்கென சுகாதார சேவைகள் திணைக்கள அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாடுகளையும் இதே குழு மேற்கொள்ளவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (த)

## திங்கட்கிழமை...

கொரோனாக் காலத்தில் தேவையான வசதிகளை ஏற்படுத்தி கொடுத்தல், இந்தக் காலத்தில் மேலதிகநேர, விசேட தின கொடுப்பனவைக் கட்டுப்பாடின்றி வழங்குதல், சுகாதார ஊழியர்களின் வெற்றிடங்களை நிரப்புதல் உட்பட 6 அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 44 தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து போராட்டத்தில் ஈடுபட்டன.

நாடு முழுவதும் நேற்றுமுதல் 12 மணி தொடக்கம் ஒரு மணித்தியாலமாக அடையாளப் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டனர். வடக்கிலும் மருத்துவமனைகளிலும் குறித்த போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பில் சுகாதார தொழிற்சங்கங்களின் ஒன்றியத்தினர் தெரிவிக்கையில்,

கடந்த ஜூலை மாதம் மேற்கொள்ளப் பட்ட பணிப்பகிஷ்கரிப்பின்போது எமது கோரிக்கைகள் சிலவற்றை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டிருந்தார்.

ஆனால், குறித்த கோரிக்கைகளை நடைமுறைப்படுத்துவதில் காலம் தாழ்த்தி இழுத்தடிப்பு மேற்கொள்ளப்படுகின்றது. எனவே, எமது கோரிக்கைகளை விரைவாக நிவர்த்தி செய்யவேண்டும். தவறின் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் 5 மணித்தியாலங்கள் பணி விலகல் போராட்டத்தில் குதிப்போம். - என்று மேலும் தெரிவித்தனர்.

இதேவேளை, இவர்களின் நேற்றைய பணிப்புறக்கணிப்பால் தாம் குறித்த நேரத்துக்குச் சேவையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்று, மருத்துவமனையில் நின்றிருந்த நோயாளிகள் தெரிவித்தனர். (த-19,25)

## புலம்பெயர்...

தீர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு ஐ.நா.வில் வைத்து ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச அழைப்பு விடுப்பது வெற்றுப் பேச்சே."

இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை (திருத்தச்)சட்டமூலம் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் உரையாற்றும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

"கடந்த 19 ஆம் திகதி நியூயோர்க் நகரில், ஐ.நா. செயலாளரை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச சந்தித்தபோது, உள்ளக பொறிமுறையில் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வதற்காக கலந்துரையாட வருமாறு புலம்பெயர் தமிழர்களுக்கு அழைப்பு விடுக்கின்றேன் என்று தெரிவித்திருந்தார்.

இந்த அரசு ஆட்சிக்கு வந்த சிறிதுகாலத்தில், ஏராளமான புலம்பெயர் அமைப்புகளைத் தடை செய்தது. இவ்வாறாகத் தடை செய்துவிட்டு ஐ.நா.வுக்கு செல்லும்போது அவர்களைப் பேச்சுக்கு அழைக்கின்றேன் என்று கூறுகின்றனர். இது முழுமையான வெற்றுப் பேச்சே.

இதேவேளை, காணாமலாக்கப்பட்டோருக்கு மரணச் சான்றிதழை வழங்குவதற்காக நடவடிக்கையெடுப்பதாக ஜனாதிபதி கூறுகின்றார். அப்படியானால் அவர்களுக்கு என்ன நடந்தது என்ற பதிலை ஜனாதிபதி வழங்க வேண்டும்.

அதேபோன்று ஆட்சிக்கு வந்தபின்னர் பல தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்தேன் என்று கூறியுள்ளார். தண்டனைக் காலம் முடிவடையும் தறுவாயில் இருந்தவர்களே அவ்வாறு விடுவிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில், இவ்வாறான அறிவித்தல்கள் சர்வதேசத்துக்கு ஜனாதிபதி வழங்கும் வெற்றுப் பேச்சுகளாகவே இருக்கும்" என்றார். (த-22)

## வர்த்தகர்களுக்கு...

அமைச்சு சார் ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் இதற்கான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்ட வரைவு தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கடந்த மாதம் 19 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

அதற்கமைய பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை (திருத்தச்) சட்டவரைவு இரண்டாம் வாசிப்புக்காக நாடாளுமன்றில் நேற்று சமர்ப்பிக்கப்பட்டது.

இந்தத் (திருத்தச்) சட்டவரைவுக்கு அமைவாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையால் சில பொருள்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை குறிப்பிட்டு வர்த்தமானி அறிவிப்பை வெளியிட்ட பின்னர், அந்தக் கட்டுப்பாட்டு விலையில் பொருள்களை விற்பனை செய்யாத வர்த்தகர்களுக்கு விதிக்கப்படும் தண்டம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதற்கமைவாக தனி வர்த்தகம், நிறுவனங்கள் மற்றும் கம்பனிகளாக பதிவு செய்யப்பட்டுள்ள அனைத்து வர்த்தகங்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த தண்டம் திருத்தம் செய்யப்படவுள்ளது.

இது தொடர்பில் ஒரு நீதிவான் முன்னிலையில் மேற்கொள்ளப்படும் விசாரணைக்குப் பின்னர், குற்றவாளிகளாக அடையாளம் காணப்படும் நபர்களுக்குத் தண்டம் அல்லது சிறைத்தண்டனை அல்லது இரண்டு தண்டனைகளும் விதிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-4)

## 1,321 தொற்று...

41 பெண்களும் 51 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதுமட்டுமன்றி, கடந்த 4 நாள்களாக 100 க்கும் குறைவான கொரோனாச் சாவு எண்ணிக்கை பதிவாகியுள்ளது.

அதன்படி, குறித்த 4 நாள்களில் கடந்த 20 ஆம் திகதி 84 கொரோனாச் சாவுகள் பதிவாகின.

மற்றைய மூன்று நாள்களில் 93, 66, 92 என்றவாறு கொரோனா சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டன.

இதேவேளை,

இலங்கையில் நேற்று ஆயிரத்து 321 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 லட்சத்து 8 ஆயிரத்து 651 ஆக அதிகரித்துள்ளது.

இதுதவிர, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 882 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 லட்சத்து 35 ஆயிரத்து 22 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## முகக்கவசம்...

தலா 5 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேற்குறித்த குற்றச்சாட்டில் பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நபர்கள், பருத்தித்துறை நீதிவான் காயத்திரி சைலவனிடம் முற்படுத்தப்பட்டனர். அதன்போதே குறித்த தண்டம் விதிக்கப்பட்டது.

அத்துடன் மதுபோதையில் சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதிப் பத்திரம் இன்றி முச்சக்கரவண்டி செலுத்தியவருக்க 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது. (த-25)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

© 2000 Agfa-Gevaert N.V.

பாகிஸ்தான் தொடரை

# இங்கிலாந்தும் கைகழுவியது!

லண்டன், செப். 23

**நியூசிலாந்தைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிரான ரி20 தொடரை இங்கிலாந்தும் கைவிட்டுள்ளது. பாதுகாப்புக் காரணங்களுக்காக இந்தத் தொடர் கைவிடப்படுகின்றது என்று இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.**




இங்கிலாந்தில் கொரோனா உச்சத்தில் இருந்தபோது பாகிஸ்தான் கிரிக்கெட் அணி அங்குசென்று விளையாடியது. இதையடுத்து அதற்கு நன்றிக்கடனான பாகிஸ்தானுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு ரி20 தொடரில் விளையாட இங்கிலாந்தும் சம்மதம் தெரிவித்தது. ஆனால், பாகிஸ்தானில் நிலவும் பாதுகாப்புப் பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு தொடரைக் கைவிட்டுள்ளது இங்கிலாந்து. முன்னதாக நியூசிலாந்து அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது. ஆட்டம் ஆரம்பமாவதற்கு சில மணிநேரங்களின் முன்னர் பாதுகாப்புக் காரணங்களுக்காக நியூசிலாந்து அணி தொடரைக் கைவிட்டுத் தாயகம் திரும்பியது. தற்போது இங்கிலாந்தும் அதே நடைமுறையைப் பின்பற்றியமையால் பாகிஸ்தானில் கிரிக்கெட் ஆட்டங்கள் நடைபெறுவது சிக்கலுக்கு உரியதொன்றாக மாறிவிட்டது. நியூசிலாந்து தொடரைக் கைவிட்டமையை அடுத்து சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் முறையிட்டி ருந்த நிலையில் தற்போது இங்கிலாந்துக்கு எதிராகவும் முறையிட வாய்ப்புள்ளது என்று கருதப்படுகின் றது. (ம)

'பெண்கள் பார்க்கின்றார்கள்'

## ஐ.பி.எல். ஆட்டங்களை ஒளிபரப்புவதற்கு தடை

தலிபான்கள் அதிர்ச்சிகர அறிவிப்பு

காபூல், செப். 23

ஐ.பி.எல். ஆட்டங்களை ஆப்கானிஸ்தானில் ஒளிபரப்பக்கூடாது என்று தலிபான்கள் தொலைக்காட்சி நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர். பெண்கள் மைதானத்துக்குச் சென்று துள்ளிக்குதித்து ஆட்டத்தைப் பார்ப்பது தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுவதாலேயே இந்த உத்தரவு விதிக்கப்பட் டுள்ளது. தலிபான்களின் ஆட்சியில் பெண்களுக்கு சுதந்திரம், உரிமை மறுப்பு என்பன இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படும் என்பது அனைவரும் அறிந்ததே. ஆட்சிப் பொறுப்பேற்ற சில நாள்களிலேயே பெண்கள் கிரிக்கெட், கால்பந்து போன்ற விளையாட்டுக்களில் ஈடுபடுவதற்குத் தலிபான்கள் தடை விதித்தனர். தற்போது அதன் தொடர்ச்சியாக குறைந்த பட்சம் ஐ.பி.எல். ஆட்டங்களைப் பார்க்கக்கூட அங்கு உரிமை மறுக்கப்பட்டுள்ளது. என்று தலிபான்கள் தெரிவித்துள்ளனர். (ம)

**வீடு வாடகைக்கு**

ஆவரங்கால் சந்தை ஒழுங்கையில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு விடப்படும். அரச உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**076 303 4064**

**காணி விற்பனைக்கு**

நீர்வேலி தெற்கு கரந்தன் பகுதியில் 2 பரப்புக் காணி நிலப்பரப்பு விற்பனைக் குண்டு. 14 அடிப் பாதையுடன் கரந்தன் சந்தியில் இருந்து 200 மீற்றர் தூரம். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

**077 814 7389, 077 614 7333**

**காணி விற்பனைக்கு**

தெல்லிப்பளை வடக்கு வீமன்காமம் (டச்சுறோட்) பகுதியில் 6 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. நிலப்பரப்பு 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 14 அடிப் பாதையுடன். பார்வையிடும் நேரம் காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை, தரகர் தேவையில்லை.

**077 814 7389, 077 614 7333**

# டெல்லி பதற்றமில்லா வெற்றி

# புள்ளிப்பட்டியலில் முதலிடம்!





டுபாய், செப். 23

ஐ.பி.எல் தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹைதராபாத் அணியைத் தோற்கடித்தது டெல்லி கேப்பிட்டல்ஸ். இந்த வெற்றியை அடுத்து புள்ளிப்பட்டியலில் மீண்டும் முதலிடம் பிடித்தது டெல்லி.

ஆட்டம் ஆரம்பமாகும் முன்னர் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் ஹைதராபாத் அணியின் நட்சத்திர வீரர் நடராஜனுக்குக் கொரோனா உறுதிப்படுத்தப்பட்டது. இன்னும் 4 வீரர்கள் தனிமைப்படுத்தப்பட்டனர். இதனால் ஹைதராபாத் அணி உள ரீதியாக ஒரு பின்னடைவுக்குள் தள்ளப்பட்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அந்த அணியால் 9 இலக்குகள் இழப்புக்கு வெறும் 134 ஓட்டங்களையே பெற முடிந்தது. அந்த அணியின் மத்திய வரிசை மற்றும் பின்வரிசை வீரர்களான சமட் 28 ஓட்டங்களையும், ரசிட் கான் 22 ஓட்டங்களையும் பெற்றதால் இந்தக் கௌரவ நிலையை ஹைதராபாத் அடைந்தது. முன் வரிசை வீரர்கள் முழுவதுமாக ஏமாற்றினார்கள். வோர்ணர் ஓட்டமெதையும் பெறாது ஆட்டமிழந்தார். வில்லியம்சன் 26 பந்துகளை எதிர்கொண்டு 18 ஓட்டங்களைப் பெற்றார். பந்துவீச்சில் ரபாடா 3 இலக்குகளைக் கைப்பற்றினார். பதிலுக்குக் களமிறங்கிய டெல்லி அணிக்கு ஆரம்ப வீரரான பிருத்வி 11 ஓட்டங்களுடன் ஏமாற்றினாலும் தவான், ஸ்ரேயாஸ் இணை வெற்றிக்கான அடித்தளத்தை அமைத்தது. உலகக்கிண்ணத்துக்கு தன்னைத் தெரிவுசெய்திருக்க வேண்டியதன் அவசியத்தை தனது துடுப்பெடுத்தாட்டத்தால் வலுவாகவே உணர்த்தினார் தவான். அவர் 42 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின்னர் பன்ட் அதிரடிகாட்ட எந்தவொரு பதற்றமும் இல்லாமல் 13 பந்துகள் மீதமிருக்க 8 இலக்குகளால் வெற்றிபெற்று ஹைதராபாத்தை ஊதியது டெல்லி. (ம)

**வேலைவாய்ப்பு**

**THINNAI HOTEL**

திருநெல்வேலியில் அமைந்திருக்கும் எமது ஹோட்டலிற்கு சமையலறை சுத்திகரிப்பாளர் உடனடியாக தேவை.

86, பலாலி வீதி,

திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

**0767 5[illegible] 628**

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம். இரண்டாம் ஒழுங்கையில் 20 அடி பாதையுடன் 12 பரப்புக் காணி சட்டபூர்வமாக சகல ஆவணங்களுடன் விற்பனைக்கு உண்டு. இரண்டு (02) பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர் தேவையில்லை. (யாழ் பஸ் நிலையத்தில் இருந்து 2 K.M தூரம்). தொடர்புகொள்ளும் நேரம் காலை 9.00-மாலை 6.00 மணிவரை)

ஒரு பரப்பின் விலை ஆறு லட்சம்.

**076 221 2037, 077 2[illegible] 0152**

**076 734 1023**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 23.09.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.